பட்ட அதிகரித்த தொகையையும் ரூபாய் 257 இலட்சம் கூட்டுறவு நிறுவன்ன களுக்கு கடனுகை வழங்கப்பட்ட அதிகரித்த தொகையையும் ரூபாய் 585 இலட்சம் தனியார் வணிகத்திற்கும் தனிப்பட்டோர்க்கும் வழங்கப்பட்ட அதிகரித்த கடனை யும் எடுத்துக் காட்டுகிறது. பணவீக்க அமுக்க சூழ்நிலையில் கைவசமுள்ள இருப்புக் களை நிதி ஈடு செய்ய கடன் கேட்பதில் அதிகரிப்பு தென்படக்கூடும். எதிர்பார்ப்பு நோக்கங்களுக்காக கையிருப்புகளுக்கு செய்யப்பட்ட நிதியீட்டம் எவ்வளவு தூரம் 1964ல் முழுமைக் கடனில் விரிவுக்கு காரணமாய் இருந்ததென்று மதிப்பிடுதல் கடி னம். ஏனைய தேவைகள், என்ற தேவைகளின்படி பாகுபடுத்தப்பட்ட பகுப்புக் களின் கீழ்வரும் முற்பணங்களின் அதிகரிப்பும் பிணைகளின்படி பாகுபடுத்தப்பட்ட பகுப்பின் கீழ்வரும் பிணையில்லா முற்பணங்கள் வர்த்தக கையிருப்பிற்கு எதி ரான முற்பணங்கள் ஆகிய இரண்டின் அதிகரிப்பும் எதிர்பார்த்தபின் நோக்கங் களுக்கான கொடுகடனின் அதிகரிப்பை எடுத்துக் காட்டக்கூடும். கொடு கடன் விரிவு பற்றி விரிவான ஆராய்ச்சி மகா வங்கியால் செய்யப்படவிருப்பதால், புதிதாகக் கொடுகடன் தொகைக் கட்டுப்பாட்டு வழிமுறைகளை அது விதிக்க வில்லை. முன்பு கொண்டுவரப்பட்ட கொடுகடன் கட்டுப்பாட்டு வழிமுறைகள் தொடர்ந்து நடைமுறையில் இருந்தன. மேலும் வர்த்தக வங்கிகளின் கொடு கடனை அவசியமற்ற தேவைகளுக்குப் பயன் படுத்தாது உற்பத்திகளுக்கு வழி படுத்தத் தார்மீகத் தூண்டுகோலும் துணைசெய்தது.

### வங்கித் தொழில் வளர்ச்சி

நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதி மகா வங்கியின் பொது ஒதுக்கு நிதியில் இருந்து ரூபாய் 100 இலட்சம் மாற்றப்பட்டு 1964ல் ஆடி மாதத்தில் நிறுவப்பட் டது. உற்பத்தித் தேவைகளுக்கு கடன் நிறுவனங்கள் கடன் கொடுப்பதை அந் நிறுவனங்களிற்கு திருப்பி நிதியீட்டம் செய்யும் வாய்ப்புகளை அளிப்பதன் மூலம் ஊக்குவிப்பதே இதனின் நோக்கம். எனினும் இந்நிதி 1964ம் ஆண்டு முடிவு வரை திருப்பி நிதி ஈட்டுவதற்கான விண்ணப்பங்களைப் பெறவில்லை. இதற்கு பல கார ணங்கள் இருக்கலாம். முதலாவதாக மூலப் பொருட்களையும் மூலதனப் பொருட் களையும் செய்வதில் ஏற்பட்ட கட்டுப்பாடுகளும், நீண்ட கால அடிப்படையில் கடன் பெறும் கேள்வியைக் குறைத்துள்ளது போலும். இரண்டாவதாக, வர்த்தக வங்கி களே தமது திருந்திய திரவத் தன்மை காரணமாக எழக்கூடிய எக் கேள்வியையும் ஏற்கத்தக்க ஒரு நிலையிலும் இருந்திருக்கலாம். அத்துடன் இத்திட்டம் இவ்வருடத் தில் நடைமுறையில் இருந்தது குறுகிய காலப்பகுதி என்ற காரணமும், இத்திட்டத் தின் ஒப்பியல்பின் புதுமைத் தன்மையும், குறிப்பிடத்தக்க காரணங்களாய் இருக்க லாம்.

கொடுகடன் காப்புறுதி திட்டத்தை உருவாக்குவதைப் பற்றி மகா வங்கி ஆராய்ந்ததோடு ஒரு குறுகிய அளவுடைய திட்டத்தையும் உருவாக்கிக் கொண் டிருக்கிறது. வர்த்தக வங்கிகளின் கூட்டுறவோடு மகா வங்கியினுல் நடாத்தப்பட்ட முந்திய பயிற்சி நிகழ்ச்சியின் ஊடாக வளர்ந்த வங்கியாளர் பயிற்சி நிலையம் மகா வங்கி, 1964ல் புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்ட பின்பு விரிவு செய்யப்பட்டது. 1964ம் ஆண்டு மார்கழி மாதம் முடிவில் இந்நிறுவனத்தில் 900 மாணவர்கள் பதியப் பட்டிருந்தனர். இந்த நிறுவனம் மக்கள் வங்கியில் புதிதாகச் சேர்ந்த ஊழியர் களுக்கு குறுகியகால விசேட பயிற்சி அளித்தது.

## (எ) அரசாங்க நிதி

### 1963—'64ம் நிதியாண்டு

ஐப்பசி 1963 முதல் புரட்டாதி 1964 வரையுள்ள நிதியாண்டிற்கான இலங்கை அரசாங்கத்தின் கணக்குகளை முந்தைய வருடங்களுக்குள்ள கணக்கு விபரங்களுடன் ஒப்பிட்டு அட்டவணை II எ-1 சுருக்கமாக காட்டுகின்றது. அவ்வட்டவணையிற் காட்டப்பட்டுள்ளவாறு, வரவு செலவுத் திட்ட இயக்கங்களின் முக்கியமான அம் சங்கள் பின்வருமாறு:

(அ) 1961–62ல் ரூபா 1,6206 இலட்சமாகவும், 1962–63ல் ரூபா 15934 இலட்சமாகவும் அமைந்த மொத்த அரசிறையுடன் ஒப்பிடுகையில் 1963–64ம் ஆண்டிற்கான மொத்த அரசிறை ரூபா 17535 இலட்சமாக உள்ளது.

(ஆ) 1961–62ல் ரூபா 20613 இலட்சமாகவும், 1962–63ல் ரூபா 19987 இலட்சமாகவும் அமைந்த மொத்த வாக்களிக்கப்பட்ட செலவுடன்[1] ஒப்பிடுகையில், 1963–64ம் ஆண்டிற்கான மொத்தச் செலவு ரூபா 22320 இலட்சமாக உள்ளது. இவ் எண் தொகைகளில் ஆழ்நிதிகளுக்கு உதவிய தொகைகளும் நேரடியாக அரசிறையிலிருந்து கொடுத்து மீளப்பட்ட பொதுப்படு கடன்களும் ஏட்டுச் சீரமைப்புகளும் நீக்கப்பட்டுள்ளன.

(இ) முற்பணக் கணக்கு இயக்கங்களின் பேரில் ரூபா 161 இலட்சம் கொண்ட நிகர வரவு ஏற்பட்டமை 1961–62ம் ஆண்டில் ஏற்பட்ட ரூபா 146 இலட்சம் கொண்ட நிகர கொடுப்பனவுடனும், 1962–63ம் ஆண்டில் ஏற்பட்ட ரூபா 137 இலட்சம் கொண்ட நிகர வரவுடனும் ஒப்பிடத்தக்கது.

(ஈ) இந்த இயக்கங்களின் விளைவாக ஏற்பட்ட நிகர பணக்குறை[2] ரூபா 4264 இலட்சமாகும். ஒப்பியல்பாக 1961–62ம் ஆண்டிலும் 1962–63ம் ஆண்டிலும் ஏற்பட்ட நிகர பணக்குறைகள் முறையே ரூபா 4561 இலட்சமாகவும், ரூபா 3917 இலட்சமாகவும் உள்ளன.

(உ) உள்நாட்டுச் சந்தை கடன் பாட்டிலிருந்து கிடைத்த ரூபா 3213 இலட்சத்திலும், அந்நிய உதவியிலிருந்து கிடைத்த ரூபா 968 இலட்சத்திலிருந்து நிர்வாகக் கடன்பாட்டின் கீழ் பெற்ற தொகையில் திருப்பிக் கொடுக்கப்பட்ட ரூபா 11 இலட்சம் ஈடு செய்யப்பட்டபின் கிடைத்த தொகையிலும் அரசாங்கப் பண மிச்சங்களை ரூபா 454 இலட்சங்களால் குறைத்ததிலும், நிகர பணக்குறையாகிய ரூபா 4624 இலட்சமும் நிதியீட்டப்பட்டது.

(ஊ) நிகர பணக்குறையினால் ஏற்பட்ட நாணய விரிவு விளைவு ஐக்கிய அமெரிக்க உதவிகளினால் எழுந்த இணைக்கு இணையான உள்ளூர் நிதிகளில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு இடம்விட்டுக் கணித்தபின் 1961–62ம் ஆண்டிற்குரிய 1904 இலட்சம் ரூபாய்களுடனும், 1962–63ம் ஆண்டிற்குரிய 1620 இலட்சம் ரூபாய்களுடனும் ஒப்பிடுகையில் 1963–64ம் ஆண்டின் போது 1629 இலட்சம் ரூபாய்களாக விளங்கியது.

**அரசிறை:**

1963-64ம் நிதியாண்டிற்கான அரசாங்க வரவு செலவுத் திட்ட இயக்கங்களின் மிகவும் திருப்திகரமானவோர் அம்சம் என்னவெனில் அரசிறையில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பேயாகும். பின்னிணைப்பு IIல் உள்ள 18ம் அட்டவணை, 1963-64ம் ஆண்டின் தற்காலிக மதிப்பீடுகளையும், உண்மையாகக் கிடைத்த அரசிறையையும் (தற்காலிகமானவை) அரசாங்க மதிப்பீடுகளில் உள்ளபடி பிரதான அரசிறைத் தலைப்புகளின்படி பாகுபடுத்திக் காட்டுகின்றது. 1963–64ம் ஆண்டின் மொத்த அரசிறையான ரூபா 17535 இலட்சம், 1962–63ம் ஆண்டில் உண்மையாகச் சேகரிக்கப்பட்ட அரசிறையாகிய ரூபா 15934 இலட்சத்திலும் பார்க்க ரூபா 1601 இலட்சத்தால் அதிகரித்துள்ளதை இவ்வட்டவணை விளக்குகின்றது. எனவே, 1963–64ம் ஆண்டிற்கான மொத்த அரசிறை, 1961–62ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1962–63ம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட அரசிறையில் ஏற்பட்ட வீழ்ச்சியை மாற்றியமைத்ததுடன் 1952–53ம் ஆண்டு முதல் வருடாவருடம் அரசிறை சேகரிப்பில் ஏற்பட்ட அதிகரிப்புத் தன்மையையும் திரும்ப நிலைநாட்டியுள்ளது.

1. அட்டவணை II எ—1ன் விடயம் 1 ஆ—(I) னதும் விடயம் 1 ஆ—(II) னதும் மொத்தத்தைக் குறிக்கின்றது.
2. தேசிய அபிவிருத்தி ஒதுக்கு நிதியால் அடைக்கப்படும் செலவில் ரூபா 2 இலட்சம் சேர்க்கப்பட்டுள்ளது.

அட்டவணை II ஏ—1

## அரசாங்க நிகரப் பண

| | 1952/53 | 1953/54 | 1954/55 | 1955/56 |
|---|---|---|---|---|
| 1. நிகரப் பணமிகை/குறை (—) .. | – 231·9 | 33·7 | 127·6 | – 1·2 |
| (அ) அரசிறை .. .. | 952·5 | 1,026·2 | 1,158·6 | 1,257·2 |
| (ஆ) செலவு (அதாவது கடன் வாங்குதல், கடன் கொடுத்தல் இயக்கங்களின்பேரில் ஏற்பட்ட நிகர வரவுகளை அல்லது கொடுப்பனவுகளைத் தவிர்த்த மொத்த கொடுப்பனவுகள்) | –1,184·4 | – 992·5 | –1,031·0 | –1,258·4 |
| (i) ஆழ்நிதிக்கு வழங்கிய உதவு தொகையையும், அரசிறையிலிருந்து நேரடியாகத் திருப்பிக் கொடுக்கப்பட்ட பொதுப்படு கடனையும் தவிர்த்து மீண்டும் எழும் செலவு (2 (ஆ) (i) விடயம் பார்க்க) (அ) .. | – 893·5 | – 772·0 | -864·9(இ) | –1,014·4 |
| (உணவு மானியம்) .. .. | (127·0) | ( 12·0) | (36·0)(இ) | ( 79·5) |
| (ii) மூலதனச் செலவு (அ) .. .. | – 220·6 | – 162·3 | – 215·5 | – 211·0 |
| (iii) தேசிய அபிவிருத்தி ஒதுக்கு நிதியால் அடைக்கப்படும் செலவு. .. .. | – 6·4 | – 3·2 | – 2·1 | – 4·0 |
| (iv) களஞ்சியங்கள், பொருட்கள் ஆகியனவற்றின் கணக்கிற்குக் கொடுக்கப்பட்ட முற்பணங்கள் ., .. | – 2·4 | 4·6 | 9·9 | 1·2 |
| (v) இதர முற்பணங்கள் (அ) .. .. | – 52·8 | – 61·1 | 34·0 | – 30·3 |
| (vi) ஏனையவை .. .. | – 8·7 | 1·5 | 7·6 | 0·1 |
| குறை நிவர்த்திக்கு நிதியீட்டுதல் | | | | |
| 2. அரசாங்கக் கடன்பாட்டு அல்லது கடன் கொடுப்பனவு இயக்கங்களின் விளைவாக ஏற்பட்ட நிகரப்பண வரவுகள் அல்லது சொடுப்பனவுகள் (–) | 216·5 | – 35·3 | – 39·0 | 12·2 |
| (அ) நிர்வாகக் கடன்பாடும், திருப்பிக் கொடுக்கப்பட்ட கடன்களும் (சில்லரைக் கடன்களும் உட்பட) .. .. | 11·9 | – 4·6 | 29·1 | – 36·5 |
| (i) கட்டுப்பணங்கள் (வழக்குத் தொடர்வோர், ஒப்பந்தக்காரர் முதலியவர்களிடமிருந்து வந்தவையும், அந்நியநாட்டு உதவிகளில் செலவு செய்யப்படாத மீதிகளும்) .. | 21·4 | – 2·1 | 34·5 | – 10·8 |
| (ii) இதர பலவகை நிதிகள் விதவைகள், அனுதைகள் உபகாரச் சம்பள நிதி, அரசாங்க சேவையாளர் சேமநிதி முதலியன) .. | – 0·2 | 0·3 | – 0·9 | – 4·8 |
| (iii) சில்லறைக் கடன்கள் (கமத்தொழில், கைத்தொழில் நாணய கூட்டுத்தாபனம், உள்நாட்டு அபிவிருத்திக் கடன் நிதி, உள்ளூர் ஆட்சிச் சபைகள் ஆகியனவற்றிற்குக் கொடுத்தவை) .. .. | – 9·3 | – 2·8 | – 4·5 | – 20·9 |
| (ஆ) உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடும், திருப்பிக் கொடுக்கப்பட்டனவும் .. | 204·6 | – 94·0 | – 80·2 | 43·5 |
| (i) ரூபாய்க் கடன்கள் .. .. | 80·0 | 70·0 | 75·0 | 74·5 |
| ஆழ்நிதிக்கு வழங்கிய உதவு தொகையும், அரசிறையிலிருந்து நேரடியாகத் திருப்பிக் கொடுக்கப்பட்ட பொதுப்படு கடனும் (கழிய) .. .. | 23·1 | 22·6 | 44·5 | 39·0 |
| மீதி .. .. | 56·9 | 47·4 | 30·5 | 35·5 |
| (ii) இறைசேரி உண்டியல்கள் .. .. | 90·6 | – 78·1 | – 44·9 | 8·0 |
| (iii) மகாவங்கி வழங்கிய முற்பணங்கள் .. | – 1·5 | – 4·7 | – 65·8 | — |
| (iv) வரிப்பண ஒதுக்குநிதிப் பத்திரங்கள் .. | — | — | — | — |
| (v) இதர (ஆ) .. .. | 58·6 | – 58·6 | — | — |
| (இ) அந்நியக் கடன்தள் .. .. | — | 63·3 | 12·1 | 5·2 |
| (i) கடன்கள் .. .. | — | 63·3 | 12·1 | 5·2 |
| திருப்பிக் கொடுக்கப்பட்டவை நீக்கி .. | — | — | — | — |
| | — | 63·3 | 12·1 | 5·2 |
| (ii) நன்கொடைகள் .. .. | — | — | — | — |
| 3. (உடனடியாகத் தேறக்கூடிய சொத்துக்களும் உட்பட) பணமீதங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் .. | – 15·4 | – 1·6 | 88·6 | 11·0 |

**மிகை/குறை (–)**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| 1956/57 | 1957/58 | 1958/59 | 1959/60 | 1960/61(உ) | 1961/62 | 1962/63 | 1963/64 (எ) |
|---|---|---|---|---|---|---|---|
| – 196·4 | – 222·3 | – 413·4 | – 417·5 | – 462·5 | – 456·1 | – 391·7 | – 462·4 |
| 1,260·5 | 1,280·0 | 1,330·4 | 1,403·8 | 1,513·9 | 1,620·6(ஊ) | 1,593·4(ஊ) | 1,753·5(ஊ) |
| –1,456·9 | –1,502·3 | –1,743·8 | –1,821·3 | –1,976·4 | –2,076·6 | –1,985·3 | –2,216·1 |
| –1,105·2 | –1,280·1 | –1,432·2 | 1,511·9(ச) | –1,540·8(ச) | –1,580·7(ச) | –1,596·4(ச) | –1,831·8(ச) |
| (105·5) | (112·0) | (146·5) | (193·0) | (248·0) | (235·4) | (225·8) | (375·4) |
| – 213·3 | – 282·6 | – 303·4 | – 306·6 | – 419·9 | – 480·6 | – 402·3 | – 400·2 |
| – 5·1 | – 3·0 | – 2·4 | – 1·5 | – 1·5 | – 0·7 | – 0·3 | – 0·2 |
| – 14·5 | — | 10·5 | – 7·1 | 1·9 | 2·4 | – 8·6 | – 5·2 |
| – 115·8 | 54·5 | – 17·1 | 5·8 | – 15·9 | – 15·8 | 27·9 | 15·1 |
| – 3·0 | 8·9 | 0·8 | — | – 0·2 | – 1·2 | – 5·6 | 6·2 |
| 175·4 | 174·7 | 351·8 | 411·6 | 462·5 | 496·3 | 391·3 | 417·0 |
| – 9·4 | 72·5 | 27·6 | 57·4 | 29·4 | 104·5 | – 33·8 | – 1·1 |
| 9·0 | 73·9 | 27·3 | 62·3 | 36·5 | 98·4 | – 28·0 | 1·0 |
| – 2·3 | 20·1 | 4·2 | 2·7 | – 1·0 | 4·8 | 0·1 | 2·5 |
| – 16·1 | – 21·5 | – 3·9 | – 7·6 | – 6·1 | 1·3 | – 5·9 | – 4·6 |
| 166·2 | 78·5 | 291·2 | 327·6 | 406·5 | 336·0 | 331·6 | 321·3 |
| 94·9 | 45·0 | 95·0 | 134·8 | 214·9 | 145·0 | 205·0 | 245·0 |
| 31·1 | 26·5 | 29·7 | 30·6 | 32·1 | 37·9 | 40·4 | 46·1 |
| 63·8 | 18·5 | 65·3 | 104·2 | 182·8 | 107·1 | 164·6 | 198·9 |
| – 3·0 | 74·6 | 179·0 | 228·2 | 198·4 | 248·0 | 124·1 | 128·4 |
| 96·3 | – 13·8 | 41·1 | 3.1(ச) | 20.6(ச) | 21.0(ச) | 36.6(ச) | – 19.4(ச) |
| 9·1 | – 0·8 | 5·8 | – 7·9 | 4·7 | 1·9 | 6·3 | 13·4 |
| — | — | — | — | — | — | — | — |
| 18·6 | 23·7 | 33·0 | 26·6 | 26·6 | 55·8 | 93·5 | 96·8 |
| 18·6 | 23·7 | 35·5 | 29·3 | 16·3 | 44·5 | 68·7 | 75·7 |
| — | — | 2·5 | 2·7 | 3·0 | 6·8 | 6·3 | 10·7 |
| 18·6 | 23·7 | 33·0 | 26·6 | 13·3 | 37·7 | 62·4 | 65·0 |
| — | — | — | — | 13·3 | 18·1 | 31·1 | 31·8 |
| –21·0 | – 47·5 | – 61·7 | – 6·0 | | 40·2 | – 0·4 | – 45·4 |

மூலம்: ஸ்ரீலங்கா மகா வங்கி

(அ) 1960–61 வரவு செலவுத் திட்டம் தொடக்கம். "அரசிறையால் அடைக்கப்படும் செலவு", எனவும் "கடன் நிதியால் அடைக்கப்படும் செலவு" எனவும், செலவைப் பாகுபடுத்தும் முறை கைவிடப்பட்டது. அதற்குப்பதிலாக அரசாங்கத்தின் மொத்தச்செலவு நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை, சொந்த வரும்படிகள், நிர்வாகச் செலவுகள், திணைக்களங்களின் சேவைகள், பொருளாதார அபிவிருத்தி முதலியன ஆகும். கடைசியாகக் கூறப்பட்ட மூன்று பகுதிகள் ஒவ்வொன்றும், மீண்டெழும் செலவு, மூலதனச் செலவு என மேலும் பிரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அரசாங்கத்தின் மொத்தச் செலவு ஏழு வாக்களிப்புக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த அட்டவணையில் சொந்த வரும்படிகள் மீண்டெழும் செலவுகள் ஆகிய வாக்களிப்புக்களின் (அதாவது வாக்களிப்புக்கள் 1, 2, 4, 6) கீழ்வரும் மொத்தச் செலவும், மூலதனச் செலவு வாக்களிப்புக்களின் (அதாவது வாக்களிப்புக்கள் 3, 5, 7) மொத்தமும் முறையே மீண்டெழும் செலவு எனவும் மூலதனச் செலவு எனவும் வெவ்வேறாகக் காட்டப்பட்டுள்ளன. 1960-61க்கு முந்தைய ஆண்டுகளில் இத்தகைய ஓர் பாகுபாடு கிடையாதபடியால், அரசிறையால் அடைக்கப்படும் செலவும், கடன் நிதியால் அடைக்கப்படும் செலவும், முறையே மீண்டெழும் செலவுக்கும், மூலதனச் செலவுக்கும் ஒப்பிடத்தக்கன என மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முந்தைய நிதியாண்டுகளில் ஏற்பட்டு, நிதியீட்டப்பட்ட முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகளின் பேரில் உண்டான நட்டங்களையும், கடன் வேலைகளுக்கான முற்பணங்களையும் மீண்டெழும் செலவுக்கும், மூலதனச் செலவுக்கும் மாற்றியதன் பயனை எழுந்த ஏட்டுச் சீரமைப்புக்களை (பற்று, வரவுகள்) தவிர்க்கின்றது. ஆகவே இத்தொகைகள், இலங்கை அரசாங்கத்தின் கணக்குகளிற் பிரசுரிக்கப்பட்ட தொகைகளுடன் ஒத்திருக்கமாட்டா.

(ஆ) அரசாங்க ஆதிக்கமுள்ள முகவர் நிலையங்களிலிருந்து பெற்ற கடன்கள்.

(இ) 1954-55ம் ஆண்டுக்கான உணவு மானியக் கணக்காக விளங்கிய 360 இலட்சம் ரூபாய்கள் முற்பணக் கணக்குகளிலிருந்து மீண்டெழும் செலவுக்கு, 1958-59ம் ஆண்டில் மாற்றப்பட்டன. 1958–59ம் ஆண்டுக்கான தொகைகளிலிருந்து இந்த ஏட்டுச் சீரமைப்பு தவிர்க்கப்பட்டிருக்க ((அ) குறிப்பைப் பார்க்க), 1954-55ம் ஆண்டுக்கான தொகைகள், இச்சீரமைப்பிற்கேற்பத் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

(ஈ) 1959-60ம் ஆண்டில், சர்வதேச நாணய நிதியில் இலங்கையின் கட்டுப்பணம் அதிகரிக்கப்பட்டதன் விளைவாக ஏற்பட்ட 370 இலட்சம் ரூபாய்கள் கொண்ட கொடுப்பனவையும், 1960–61ம் ஆண்டில் சர்வதேசப் புனருத்தாரண அபிவிருத்தி வங்கி, சர்வதேச அபிவிருத்திச் சங்கம் ஆகியனவற்றிற்கு செய்த 22 இலட்சம் ரூபாய்கள் கொண்ட கொடுப்பனவையும், 1961–62, 1962-63, 1963-64ம் ஆண்டுகளில் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்குச் செய்த 2 இலட்சம் ரூபா கொண்ட கொடுப்பனவையும், தவிர்க்கின்றது. இக்கொடுப்பனவுகள் மகாவங்கியிலிருந்து பெற்ற விசேடக் கடன்கள் மூலம் ஈட்டப்பட்டன.

(உ) அன்னிய நன்கொடைகளிலிருந்து ஈடுசெய்யப்படும் மூலதனச் செலவுகள், 1960–61ம் ஆண்டு முதலாக வரவு செலவுத் திட்டத்தினுள் சேர்க்கப்பட்டுள்ளது. 1960/61ம் ஆண்டிற்கு முன் வரவு செலவுத் திட்ட நிதியீட்டத்திற்காக இறைசேரிக்கு கிடைக்கக்கூடிய அன்னிய நன்கொடைகளின் செலவு செய்யப்படாத மிச்சங்கள் மட்டும் நிர்வாகக் கடன்பாடுகளுட் சேர்க்கப்பட்டுள்ளன.

(ஊ) 1961–62ம் ஆண்டிற்கும், 1962–63ம் ஆண்டிற்கும் 1963–64ம் ஆண்டிற்குமான அரசிறையின் எண் தொகைகள் "அரசாங்கக் கணக்குகள்" எனப் பிரசுரிக்கப்பட்ட எண் தொகைகளுடன் பின்வரும் சீர்திருத்தங்களின் காரணத்தால் ஒத்துவரமாட்டா.

(1) 1961–62ம் ஆண்டில், அரசாங்க கணக்குகளில் தேசிய அபிவிருத்தி நிதியில் வரவு வைத்துக் காட்டப்பட்டதும், தேசிய அபிவிருத்தி வரியினூற் கிடைத்ததுமான ரூபா 186 இலட்சம் கொண்ட தொகை அரசிறையிற் சேர்க்கப்பட்டும், தேசிய வெள்ள நிவாரண நிதியிலிருந்து அரசிறைக்கு மாற்றப்பட்ட ரூபா 206 இலட்சம் கொண்ட தொகை அரசிறையிலிருந்து விலக்கப்பட்டும் இருக்கின்றன. அரசிறையில் வரவு வைத்துக் காட்டப்பட்ட, அன்னிய அரசாங்கங்களாலும், முகவர் நிலையங்களாலும் நன்கொடையாக வழங்கப்பட்ட உபகரணங்களின் பெறுமானமாகிய ரூபா 47 இலட்சம் கொண்ட தொகை, அரசிறையிலிருந்து விலக்கப்பட்டு அன்னிய நன்கொடைகளின் கீழ் (விடயம் 2 (இ) (ii) ) காட்டப்பட்டிருக்கின்றது (2) 1962–63ம் ஆண்டின் தேசிய அபிவிருத்தி வரியினூற் கிடைத்த ரூபா 175 இலட்சம் கொண்ட தொகை அரசிறையின் கீழ் மாற்றப்பட்டிருக்கையில், அந்நிய அரசாங்கங்களாலும், முகவர் நிலையங்களாலும் நன்கொடையாக வழங்கப்பட்ட உபகரணங்களின் பெறுமானமாகிய ரூபா 28 இலட்சம் கொண்ட தொகை அரசிறையிலிருந்து விலக்கப்பட்டு அன்னிய நன்கொடைகளின் கீழ்க் காட்டப்பட்டிருக்கின்றது. (3) 1963-64ம் ஆண்டில், தேசிய அபிவிருத்தி வரியினல் கிடைத்த ரூபா 29 இலட்சம் கொண்ட தொகை அரசிறையில் சேர்க்கப்பட்டும், அன்னிய அரசாங்கங்களாலும், முகவர் நிலையங்களாலும் நன்கொடையாக வழங்கப்பட்ட உபகரணங்களின் பெறுமானமாகிய ரூபா 16 இலட்சம் கொண்ட தொகை அரசிறையிலிருந்து விலக்கப்பட்டு அன்னிய நன்கொடையின் கீழ்க் காட்டப்பட்டும் இருக்கின்றது.

(எ) தற்காலிகமானவை.

1963–64ம் ஆண்டு அரசிறையில் ஏற்பட்ட 1601 இலட்சம் ரூபாய்களைக் கொண்ட அதிகரிப்பிற்கு, 1962–63ம் ஆண்டு சேகரிக்கப்பட்ட அரசிறையின் தாழ்ந்த மட்டமே காரணமாயிருந்த பொழுதிலும், 1963–64ம் ஆண்டு சேகரிக்கப்பட்ட அரசிறையே 1950–51ம் நிதியாண்டிற்குப்பின் எந்த ஓர் ஆண்டிலும் ஏற்பட்ட மிகவும் உயர்ந்த அதிகரிப்பாகும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அட்டவணை II எ–2 பொருளாதாரத் தொகுதிகளின்படி வகுக்கப்பட்ட அரசிறையைக் காட்டுகின்றது. 1962–63ம் ஆண்டிலும் பார்க்க 1963–64ம் ஆண்டின் அரசிறை அதிகரித்தமைக்குள்ள முக்கிய காரணம், இறக்குமதித் தீர்வைகளினுற் (விடயம் 1 (ஆ) (3)) சேகரிக்கப்பட்ட தொகையில் மட்டும் ஏற்பட்ட ரூபா 838 இலட்சம் கொண்ட கணிசமான அதிகரிப்பேயாகும். பஞ்சிலாடைகள், "ஏனைய பொருட்கள்" சீனி, கோதுமை, தானியங்கள், கோதுமை மா, ஆகிய இறக்குமதிகளிலிருந்து சேர்க்கப்பட்ட தீர்வைகளே இத்தொகுதியில் ஏற்பட்ட இவ்வதிகரிப்பிற்கு துணைபுரிந்த விடயங்களாகும். ஏனைய தொகுதிகளில், நடைமுறை இயக்கங்களிலுள்ள (விடயம் 2 (அ)) பொருட்களினதும், சேவைகளினதும் விற்பனவுகளின் வரவுகள் 229 இலட்சம் ரூபாய்களாலும், பொது விற்பனவுகளும், தொழில் சுழல்வு வரிகளிலும் (விடயம் 1 (ஆ) (1)) 159 இலட்சம் ரூபாய்களாலும், சொந்த வருமானங்களிலிருந்தும் கூட்டுத் தொழில் முயற்சிகளினதும் வருமானங்களிலிருந்தும் (விடயம் (1) (அ) (1)ம் (2) கிடைத்த வரிகள் 131 இலட்சம் ரூபாய்களாலும், அதிகரித்துள்ளன. அரசாங்க ஏகபோக தொழில்களில் (விடயம் 1 (ஆ) (IX)), ஏற்பட்ட மிகைகளும், காணி வரியும், (விடயம் 1 (இ) (3)) முறையே 105 இலட்சம் ரூபாய்களாலும் 85, இலட்சம் ரூபாய்களாலும் வீழ்ச்சியுற்றன.

1963–64ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மூலமதிப்பீடுகளுடன் ஒப்பிடுகையில், உண்மையாகச் சேகரிக்கப்பட்ட அரசிறையில் ரூபா 341 இலட்சம் கொண்ட வீழ்ச்சி காணப்படுகின்றது இவ் வீழ்ச்சியின் குறுகிய முக்கியத்துவம் 1962–63ம் ஆண்டுக்கான உயர்ந்த மதிப்பீட்டுடன் உண்மையில் சேகரிக்கப்பட்ட அரசிறையை ஒப்பிடுகையில் புலனுகின்றது. இவ் வீழ்ச்சி 1960–61ம் ஆண்டில் ரூபா 1560 இலட்சமாகவும், 1961–62ம் ஆண்டில் ரூபா 1200 இலட்சமாகவும் இருந்தது. 1963–64ம் ஆண்டு அரசிறையில் ஏற்பட்ட ரூபா 341 இலட்சம் கொண்ட வீழ்ச்சிக்கு ஏற்றுமதித் தீர்வைகளின் (விடயம் 1 (ஆ) 4) சேகரிப்பில் ஏற்பட்ட 304 இலட்சம் ரூபாய்களைக் கொண்ட வீழ்ச்சியும், பொது விற்பனவுகளும், தொழிற் சுழல்வு வரிகளில் (விடயம் 1 (ஆ) (1)) ஏற்பட்ட 290 இலட்சம் ரூபாய்களைக் கொண்ட வீழ்ச்சியுமே முக்கிய காரணங்களாகும். ஏற்றுமதி தீர்வைகள் என்ற தொகுதியில் இரப்பர் தேயிலை ஏற்றுமதியிலிருந்தும் சேகரிக்கப்பட்ட தீர்வைகள் முறையே ரூபா 282 இலட்சங்களாலும், ரூபா 80 இலட்சங்களாலும் வீழ்ச்சியுற்ற பொழுது தொழிற் சுழல்வு வரிகளை அமுல் ஆக்குவதில் ஏற்பட்ட தாமதத்தின் காரணமாகவே பொது விற்பனைகளிலிருந்தும் தொழில் சுழல்வு வரிகளிலிருந்தும் சேகரிக்கப்பட்ட அரசிறை வீழ்ச்சியுற்றது. மறுபக்கத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பொருட்களின் மீதான விற்பனை வரியிலிருந்து (விடயம் 1 (ஆ) (2)) சொந்த வருமானங்களிலிருந்தும், கூட்டு தொழில் முயற்சிகளினதும் வருமானங்களிலிருந்து (விடயம் 1 (ஆ) (1)) சேகரிக்கப்பட்ட வரிகள் முறையே ரூபா 273 இலட்சங்களாலும், ரூபா 227 இலட்சங்களாலும் அதிகரித்துள்ளன.

1962/63ம் ஆண்டின் உண்மையான அரசிறையுடனும் 1963/64ம் ஆண்டின் மூலமதிப்பீடுகளுடனும் ஒப்பியல்பான வகையின் 1963/64ன் உண்மை அரசிறையுள் (தற்காலிகமானவை) அடங்கும் அரசிறை விடயங்களில் ஏற்பட்ட முக்கிய மாற்றங்கள் பற்றிய விபரங்களை அட்டவணை II (எ) 3 காட்டுகின்றது.

1962/63க்கான உண்மையாக சேகரிக்கப்பட்ட ஏற்றுமதித் தீர்வைகளது தொகையோடு ஒப்பிடுகையில் 1963/64ம் ஆண்டில் இத்தொகை ரூபா 13 இலட்சத்தால் குறைந்திருந்தது. ரூபா 22 இலட்சமும், ரூபா 142 இலட்சமுமான முறையே தேயிலையின் மீதான தீர்வைகளின் சேகரிப்புக்களின் அதிகரிப்பு (கொழும்பு, லண்டன், ஏலங்களில் விதிக்கப்பட்ட தேயிலை வரி உட்பட) தெங்குப்பொருட்களின் தீர்வைச் சேகரிப்புக்களின் அதிகரிப்பு ஆகியவற்றினுல் தேற்றப் பெற்ற ரூபா 175 இலட்சம் கொண்ட இரப்பர் தீர்வைச் சேகரிப்புகளில் ஏற்பட்ட வீழ்ச்சியே இதற்

குக் காரணமாம். இரப்பர் தீர்வைச் சேகரிப்புகளில் ஏற்பட்ட வீழ்ச்சி ஏற்றுமதி தொகையளவிலும் (70 இலட்சம் இருத்தலால்) சராசரி க. ஏ. பெ.[1] விலையிலும் ஏற்பட்ட வீழ்ச்சியின் ஒருமித்த விளைவாகும்.

மறுபக்கத்தில் ஏற்றுமதியின் அளவில் ஏற்பட்ட அதிகரிப்பும் அத்துடன் சேர்ந்து வந்த விலைகளின் உயர்வும் தேங்காய் ஏற்றுமதியிலிருந்து பெரும் தீர்வை வரவுகளின் அதிகரிப்புக்குப் பெரிதும் காரணமாகும். 1962/63ல் 43·1 ஆயிரம் தொன்களாக இருந்த கொப்பரா ஏற்றுமதிகள் 1963/64ல் 59·3 ஆயிரம் தொன்களுக்கு அதிகரித்தன. இவ்வேளையில் தேங்காய் துருவல் ஏற்றுமதிகளும் தேங்காய்

அட்டவணை II எ—3

## அரசாங்க அரசிறை

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | மூமதிப்பீடுகள் 1963/64 | உண்மையான (தற்காலிகமான) 1963/64 | உண்மையான 1962/63 | மாற்றம் (உண்மையான) 1962/63ல் இருந்து 1963/64 | 1963/64 ன் மூலமதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் 1693/64 ன் (உண்மையில்) அதிகரிப்பு (+) அல்லது குறை (—) |
|---|---|---|---|---|---|
| 1. ஏற்றுமதித் தீர்வைகள்* .. | 307·8 | 277·4 | 278·7 | – 1·3 | — 30·4 |
| (அ) தேயிலை (தேயிலை வரியும் உட்பட) .. | 226·0 | 218·0 | 215·8 | 2·2 | — 8·0 |
| (ஆ) இரப்பர் .. .. | 40·0 | 11·8 | 29·3 | – 17·5 | — 28·2 |
| (இ) தெங்கு .. .. | 35·7 | 41·6 | 27·4 | 14·2 | + 5·9 |
| 2. இறக்குமதித் தீர்வைகள் (அ)* .. .. | 487·3 | 481·5 | 397·7 | 83·8 | — 5·8 |
| (அ) பஞ்சிலாடைகள் .. .. | 20·0 | 47·5 | 22·8 | 24·7 | + 27·5 |
| (ஆ) தானியமும், கோதுமை மாவும் .. | 18·3 | 29·3 | 13·1 | 16·2 | + 11·0 |
| (இ) மண்ணெண்ணெய் மோட்டார், திரவ எரிபொருள் .. .. | 110·0 | 88·3 | 100·3 | – 12·0 | — 21·7 |
| (ஈ) புகையிலையும், சிகரெட்டுகளும் .. | 45·0 | 39·8 | 46·1 | – 6·3 | — 5·2 |
| (உ) சீனி .. .. | 26·0 | 33·8 | 11·8 | 22·0 | + 7·8 |
| (ஊ) ஏனையவை** .. .. | 217·5 | 180·9 | 148·3 | 32·6 | — 36·6 |
| 3. வருமானவரி (மேலதிக அறவீடு தவிர்த்து) .. | 271·5 | 281·3 | 217·2 | 64·1 | + 9·8 |
| மேலதிக அறவீடு*** .. | — | 3·5 | 41·6 | – 38·1 | + 3·5 |
| 4. தனியாளுக்கான வரி .. .. | 20·0 | 12·7 | 12·4 | 0·3 | — 7·3 |
| 5. சாராய விற்பனை இலாபங்கள் (ஆ) .. | 83·0 | 88·0 | 98·0 | – 10·0 | + 5·0 |
| 6. புகையிலை வரி .. .. | 66·0 | 92·3 | 80·3 | 12·0 | + 26·3 |
| 7. காணி வரி*** .. .. | — | 2·7 | 11·2 | – 8·5 | + 2·7 |
| 8. தேசிய அபிவிருத்தி வரி*** .. .. | 2·0 | 2·9 | 17·9 | – 15·0 | + 0·9 |
| 9. 1963-64ம் ஆண்டில் புகுத்தப்பட்ட புது வரிகளும், அரசிறை நடவடிக்கைகளும் .. | | | | | |
| (அ) மொத்த வரிகள் .. .. | 45·0 | 16·0 | — | 16·0 | — 29·0 |
| (ஆ) அன்னிய செலாவணி வரி . | 10·0 | 3·7 | — | 3·7 | — 6·3 |
| (இ) தேசிய லொத்தர் .. .. | 15·0 | 2·7 | — | 2·7 | — 12·3 |
| 10. ஏனைய அரசிறை .. .. | 480·0 | 488·8 | 438·4 | 50·4 | + 8·8 |
| மொத்தம் .. .. | 1,787·6 | 1.753·5(இ) | 1.593·4(இ) | 160·1 | — 34·1 |

மூலம்: ஸ்ரீலங்கா மகா வங்கி.

(அ) உத்தரவுச் சீட்டு முறையின் கீழ் அமைந்த இறக்குமதிகளின் மீதுள்ள உத்தரவுச் சீட்டுக் கூலிகள் உட்பட.

(ஆ) கல் ஓயா, கந்தளாய் மதுபானங்கள் உட்பட.

(இ) அட்டவணை II (எ) 2 அடிக்குறிப்பில் (+) கொடுக்கப்பட்ட காரணங்களால், அரசிறையின் இவ்வெண் தொகைகள் "அரசாங்கக் கணக்குகள்" எனப் பிரசுரிக்கப்பட்ட எண் தொகைகளுடன் ஒத்துவரமாட்டா.

* இத்தலைப்புகளின் கீழ் பிரதான விடயங்கள் மட்டுமே குறிக்கப்பட்டிருப்பதால், இவற்றின் மொத்தமும் இவற்றின் கூறின விடயங்களின் மொத்தமும், ஒத்துவரமாட்டா.

** அரசாங்க அரசிறைப் பகுப்பில் காட்டப்பட்ட விடயம். [தலைப்பு I துணைத் தலைப்பு I (9)]

*** இவ்வரிகள் நடைமுறையில் இல்லாதுபோய்விட்டன.

1. 1963 கார்த்திகை 28ந் தேதி தொட்டு இரப்பர் மீதான ஏற்றுமதித் தீர்வைகள் ஒரு சாய்வுப் பிரமாண முறைப்படி அமைக்கப்பட்டன.

எண்ணெய் ஏற்றுமதிகளும் 1962/63ல் முறையாக 47·2 ஆயிரம் தொன்களில் இருந்து 84·3 ஆயிரம் தொன்களிலிருந்தும் 1963/64ல் முறையாக 55·1 ஆயிரம் தொன்களுக்கும் 104·5 ஆயிரம் தொன்களுக்கும் அதிகரித்தன. சாதகமான விலை விளைவுகளின் பயனுக இயல்பினுல் ஏற்படும் அதிக தன்மையான தீர்வை விகிதங்களாலும் இந்த ஏற்றுமதி அளவு அதிகரிப்புகளினுல் ஏற்படும் விளைவுகள் மேலும் உயர்வுற்றன. இம் மூன்று வித தெங்குப் பொருட்களினதும் சராசரி விலை (க. ஏ. பெ.) ஒரு அந்தருக்கு 56 ரூபாய் 96 சதத்திலிருந்து ரூபா 59·07 சதத்திற்கு அதிகரித்தது. தேயிலையின் (க. ஏ. பெ.) விலையில் 1962/63ல் இருத்தலுக்கு ரூபாய் 2·53 சதத்திலிருந்து 1963/64ல் இருத்தலுக்கு ரூபாய் 2·49 சதத்திற்கு இருத்தல் 4 சதமாக ஒரு வீழ்ச்சி ஏற்பட்ட பொழுதும் அதனுடைய தீர்வையிலிருந்து பெற்ற சேர்க்கைகளில் ஒரு சிறிய அதிகரிப்பு ஏற்பட்டது. இதற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவில் 1962/63ல்[2] இருந்து 1963/64ல் ஏற்பட்ட 213 இலட்ச தொன் அதிகரிப்பே காரணமாயிருந்தது.

சென்ற ஆண்டோடு ஒப்பிடுகையில் இறக்குமதி வரி வருமானம் 1963/64ம் ஆண்டில் 838 இலட்சம் ரூபாய்கள் அல்லது 21·1 சத வீதம் கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பை பதிவு செய்துள்ளது. பருத்திப் புடவைகள் (247 இலட்சம் ரூபாய்கள்) சீனி (220 இலட்சம் ரூபாய்கள்) தானியமும், கோதுமை மாவும் (162 இலட்சம் ரூபாய்கள்) ஏனைய பொருட்கள் (326 இலட்சம் ரூபாய்கள்) என்ற மேற்குறித்த பகுப்புக்களின் கீழ் உள்ள சேகரிப்புகளினது அதிகரிப்பு 955 இலட்சம் ரூபாய்களாக விளங்கியது. இந்த அதிகரிப்பு மண்ணெண்ணெ, மோட்டார் ஸ்பிரிட், திரவ எரி பொருள் (120 இலட்சம் ரூபாய்கள்) புகையிலை சிகரெட் (63 இலட்சம் ரூபாய்கள்) ஆகியவற்றில் இருந்து பெறப்பட்ட குறைந்த தீர்வைச் சேகரிப்புகளினுல் ஈடு செய்யப்பட்டுள்ளது. பருத்திப்புடவை, சீனி, தானியம், கோதுமை மா முதலியவற்றில் இருந்து பெற்ற அதிகரித்த தொகைகளுக்கு, இறுதியாகக் குறிக்கப்பட்ட இரு பொருட்களினது இறக்குமதி அளவுகளில் அதிகரிப்பு ஏற்பட்டதும் கடந்த வருடங்களுக்குரிய இறுக்கப்படாத தீர்வைகள் உணவு ஆணையாளராற் பெறப்பட்டதும், காரணங்களாகும். குறிப்பாக, ஆராய்தற்குரிய இந்நிதி ஆண்டில், புடவை இறக்குமதியின் அளவு இரட்டித்துள்ளதென்பதை இறக்குமதி அளவு அட்டவணை எடுத்துக் காட்டுகின்றது. அதே போல மண்ணெண்ணெ, மோட்டார் ஸ்பிரிட், போன்ற இத்தகையவற்றில் வரியின் வீழ்ச்சி ஏற்பட்டதற்கு, பெற்றேலியக் கூட்டுத்தாபனம் காலம் தாழ்த்தி வரி செலுத்தியதும், இறக்குமதி அளவில் குறைப்பு ஏற்பட்டதால் சிகரெட், புகையிலை வரியில் ஏற்பட்ட வீழ்ச்சியுமே காரணமாகும். "ஏனைய பொருட்கள்" என்ற பகுப்பில் அதிகரித்த தொகை, வரியாகக் கிடைத்ததற்குக் காரணம், 1963ம் ஆண்டில் இறக்குமதி வரியில் ஏற்பட்ட கூரிய அதிகரிப்பேயாகும். இது, போகபோக சார்பான பொருட்களினது இறக்குமதியில் தோற்றுவிக்கப்பட்ட மட்டுப்படுத்தல்களின் ஏனைய வழி முறைகளை நிரம்பல் செய்தது.

1963/64ம் ஆண்டு வருமான வரி வரவுகளை (மேலதிக அறவீட்டைத் தவிர்த்து) 1962/63ம் ஆண்டு உண்மையான வரவுகளுடன் ஒப்பிட்டு நோக்குகையில், இவற்றில் ரூபா 641 இலட்சம் அல்லது 29·5 சதவீதப்படியான அதிகரிப்புத் தெரிகின்றது. வருமானவரி வரவுகளின் அதிகரிப்பிற்கான காரணங்கள் பின்வருமாறு:—

(அ) கூட்டு நிலைய வரி விகிதத்தை 45 சதவீதத்திலிருந்து 57 சதவீதத்திற்கு உயர்த்தியமை.

(ஆ) தனியாட்களுக்குரிய ஆகக் குறைந்த வரி விகிதங்களை 5 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்கு உயர்த்தியமை,

(இ) மனைவி மக்களது வரியிறுப்புக்கு உட்படாத படிகளைக் குறைத்தமையும் சார்ந்த இனத்தவரின் படி வாய்ப்பைக் கட்டுப்படுத்தியமையும்.

(ஈ) வரிக் கூறுகளில் மாற்றம் ஏற்படுததியமை.

(உ) நுண்ணுய்வுக் கிளையினுல் செய்யப்பட்ட சிறப்பு வேலை.

---

2. தேயிலையின் ஏற்றுமதிகள் 1962/63ல் 4516 இலட்சம் இருத்தல்களாக இருந்ததற் கெதிராக, 1963/64ல் 4729 இலட்சம் இருத்தல்களாக இருந்தன.

(ஊ) கூடிய பயன்விளைவிக்கும் வரி நிருவாகம், வருமான வரிக்கும் தேசிய அபிவிருத்தி வரிக்கும் மீதுள்ள மேலதிக அறவீடு, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்பொழுது முறையே ரூபா 381 இலட்சத்தாலும், ரூபா 150 இலட்சத்தாலும், குறைவுற்றது. இவ்விரு வரிகளினாலும் சேர்ந்த தொகைக் குறைப்பிற்கு, 1963/64ம் ஆண்டில், இவ்வரிகள் நடைமுறையில்லாதிருந்தமையே காரணமாகும். இவ்வாண்டில் சேர்ந்த தொகை, கொடுக்கப்பட வேண்டிய நிலுவைகளையே குறித்தது.

1923/64ல் கொண்டுவரப்பட்ட புதிய வரி, வருமான வழிமுறைகள், 476 இலட்சம் ரூபாய்கள் கொண்ட ஒரு குறையைப் பதிவு செய்துள்ளன. மொத்த விற்பனவு வரிகள், மூல மதிப்பீடாகிய 450 இலட்சம் ரூபாய்களை விட 290 இலட்சம் ரூபாய்களால் குறைவுற்றிருந்தன.

அந்நிய செலாவணிவரி, மூலமதிப்பீடாகிய 100 இலட்சம் ரூபாய்களைவிட 60 இலட்சம் ரூபாய்களாலானகுறையை பதிவுசெய்தன. உற்பத்தியாளர்களின்மொத்த விற்பனவு வரியினது[1] விகிதத்தைக் குறைக்கும் முகமாகக் கொண்டுவரப்பட்ட சீர்திருத்தத்தின் காரணத்தாலும், அந்நிதியாண்டிற்கு[2] சேரவேண்டிய சேகரிப்புகளில் ஆக இரண்டு காலாண்டுகளுக்கானவை மட்டும் கிடைத்தகாரணத்தாலுமே மொத்த விற்பனவு வரிகளில் குறைவு ஏற்பட்டது. அந்நிய செலாவணி அமுலுக்கு வரும்நாள், 1964ம்ஆண்டு, தைமாதம் 11ம் திகதியானமையினால், அந்நிய செலாவணி வரியில் ஏற்பட்ட குறையும், 1963/64ம் நிதியாண்டிற்கு வரவேண்டிய சேகரிப்புகளில் ஆக இரண்டு காலாண்டுப் பகுதிகளுக்குரியவை மட்டும் கிடைத்தமையினாலேயே ஏற்பட்டது. தேசிய அதிட்டச்சீட்டிழுப்பிலிருந்து வந்த வருமானம், மூல மதிப்பீடாகிய 150 இலட்சம் ரூபாய்களிற் கெதிராக, ஆக 27 இலட்சம் ரூபாய்களாகவே உள்ளது. தேசிய அதிட்டச் சீட்டு இழுப்புடன் இணைந்து இயங்குகின்ற கைத்தொழிற் பொருட்காட்சி அதிட்டச் சீட்டிழுப்பு, தேசிய அதிட்டச் சீட்டிழுப்பிலிருந்து வரும் வருமானத்தை ஓரளவு பாதித்துள்ளதாகத் தோன்றுகின்றது.

கடந்த நிதி வருடத்திலிருந்ததைவிட இவ்வருடத்தில் மாற்றங்களைப் பதிவு செய்த மேலும் இரண்டு வருமான மூலங்களாவன, புகையிலை வரியும், சாராய விற்பனையிலிருந்து பெற்ற இலாபங்களுமாகும். புகையிலை வரியிலிருந்து பெற்ற 120 இலட்சம் ரூபாய்களைக் கொண்ட அதிகரித்த சேகரிப்புகள் உள்நாட்டுப் புகையிலையின் அதிகரித்த பாவிப்பின் காரணத்தாலும், தீர்வையின் வீதத்தினது அதிகரிப்பின் காரணத்தினாலுமே ஏற்பட்டது. உள்நாட்டுப் புகையிலையின் பாவிப்பு, கடந்த ஆண்டிலிருந்ததைவிட 418,332 இறாத்தல்கள் கொண்ட அதிகரிப்பைக் காட்டியது. புகையிலையின் மீதான தீர்வை வீதம், இறாத்தலுக்கு 28·00 ரூபாய்களிலிருந்து, ரூபா 28·50 சதங்களுக்கு 1964ம் ஆண்டு, ஆடி மாதம் 31ம் திகதியிலிருந்து உயர்த்தப்பட்டது. சாராய விற்பனையிலிருந்து பெற்ற இலாபங்கள், கடந்த ஆண்டிற்குரிய சேகரிப்புகளுடன் ஒப்பு நோக்குகையில் 100 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியுற்று 880 இலட்சம் ரூபாய்களாக அமைந்துள்ளன. இது, கடந்த ஆண்டுகளின்போது ஒன்று சேர்ந்த இலாபங்களிலிருந்து 1962/63ம் ஆண்டில் இம்மூலத்திலிருந்து வந்த 180 இலட்சம் ரூபாய்கள் கொண்ட தொகை, இறைவரி சேகரிப்புகளுக்கு வரவு வைக்கப்பட்ட காரணத்தால் ஏற்பட்டது. 1963/64ம் ஆண்டிற்குரிய மூலமதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில், உண்மை இறைவரிச் சேகரிப்புகள் 50 இலட்சம் ரூபாப்கள் கொண்ட அதிகரிப்பைப் பதிவு செய்தன. வேறுபாடு யாதெனில், கடந்த ஆண்டுகளின்போது ஒன்று சேர்ந்த இலாபங்களிலிருந்து கூடுதலாக 50 இலட்சம் ரூபாய்கள் கொண்ட தொகையை வரவு வைக்க வேண்டுமென்ற தீர்மானத்தின் காரணமேயாகும்.

**செலவு:**

1963/64ம் ஆண்டுக்குரிய மீண்டு வரும் செலவினதும், மூலதனச் செலவினதும்[3] தவணைத் தொடர்ச்சியை, பின்னிணைப்பு 2ல் உள்ள அட்டவணை 17ம், அவற்றின் மூல மதிப்பீடுகளையும், துணையான ஏற்பாட்டு முறைகளையும் பின்னிணைப்பு 2ல் உள்ள அட்டவணை 19ம் காட்டுகின்றன. இவை அத்துடன் மீண்டு வரும் செல

1. வரவு செலவுத் திட்டத்தின் குழு ஆய்வு நிலையின்போது, உற்பத்தியாளரின் மொத்த விற்பனவு வரியினது வீதம் 1·10 சதவீதத்தில் இருந்து 3 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது.
2. மொத்த விற்பனவு வரிகள், 1964ம் ஆண்டு தை மாதம் 1ம் திகதியிலிருந்து நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டன. இவ்வரிகளின் கீழ், சேகரிப்புகள் காலாண்டு அடிப்படையில் நடாத்தப்படுவதால், 1963/64ம் ஆண்டின் இறுதிக் காலாண்டிற்குரிய சேகரிப்புக்கள், 1964/65ம் ஆண்டிற்கான இறைசேரி சேகரிப்புக்களைச் சேர்ந்துவிடும்.
3. மதிப்பீடுகளில் பாகுபடுத்தப்பட்டுள்ளபடி.

வினதும், மூலதனச் செலவினதும் 1963/64ம் ஆண்டிற்கான உண்மை (தற்காலிக மானவை) எண் தொகைகளேயும், 1964/65ம் ஆண்டிற்கான அவற்றின் மூல மதிப்பீடு களேயும் காட்டுகின்றன. மொத்தச் செலவு, கடந்த நிதியாண்டில் இருந்ததைவிட 2308 இலட்சம் ரூபாய்களால் அல்லது 11·6 சதவீதத்தால் உயர்வுற்று இவ்வாண்டில் 22161 இலட்சம் ரூபாய்களாக உள்ளது. அத்துடன் மொத்தச் செலவு, 1954/55ல் இருந்து, 1963/64 வரையிலான பத்து வருட காலப்பகுதியில் 1185 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அல்லது 11·5 சதவீதம் கொண்ட வருடாந்தச் சராசரி வீதத்தால் அதிகரித்துள்ளதென்பது காணத்தக்கதாக உள்ளது.

1963/64ம் ஆண்டுக்கான மீண்டு வரும் செலவு[1] கடந்த நிதியாண்டிலிருந்ததை விட 2354 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பைக் காட்டி, 18318 இலட்சம் ரூபாய்களாக உள்ளது. எனினும், மூலதனச் செலவு[2] 1962/63ம் ஆண்டில் 4002 இலட்சம் ரூபாய்களுக்கு, 21 இலட்சம் ரூபாய்கள் கொண்ட சிறு வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது. அமைச்சுகளின்படி செய்த பாகுபாடு, மீண்டு வரும் செலவின் மிகப் பெரிய அதிகரிப்பு, விவசாயம், உணவு, மீன்பிடித்தொழில் அமைச்சின் கீழேயே ஏற்பட்டுள்ளதென்பதைக் காட்டுகின்றது. 1963/64ம் ஆண்டில் தபால் தந்திச் சேவைகள் அமைச்சு, நிதி அமைச்சு உள்ளூராட்சி, உள்நாட்டு அமைச்சு ஆகியவையும் அவற்றின் மீண்டுவரும் செலவினே அதிகரித்துள்ளன. இது, 1963/64ம் ஆண்டில் தம் மீண்டு வரும் செலவைக் குறைத்த, கலாச்சார சமூக சேவை அமைச்சு, போக்கு வரத்து அமைச்சு ஆகியவற்றின் அனுபவத்திற்கு முரணுக உள்ளது. மூலதனச் செலவின் சந்தர்ப்பத்தில், உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக விநியோக அமைச்சு, கிராம கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு, நிதி அமைச்சு ஆகியவற்றின் கீழ், பெரிய அதிகரிப்புகள் ஏற்பட்டுள்ளன. எனினும், கலாச்சார சமூக சேவை அமைச்சு, காணி நீர்ப்பாசன மின்சார அமைச்சு, உள்ளூராட்சி உள்நாட்டு விவகார அமைச்சு, ஆகியவை, அவற்றின் மூலதனச் செலவைக் கடந்த நிதியாண்டிலிருந்ததை விட இவ்வாண்டில் குறைத்துக் கொண்டன.

மீண்டும் வரும் செலவினதும், மூலதனச் செலவினதும் வாக்குப் பணங்களின் கீழ், 1963/64ம் ஆண்டில் ஏற்பட்ட உண்மைச் செலவுகள், அவ்வாண்டு மூல மதிப்பீடுகளினின்றும் வேறுபாடுகளே, எதிரான முறைகளிலே பதிவு செய்தன. மீண்டு வரும் செலவு மதிப்பீட்டைவிட 978 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்திருக்கும் போது, மூலதன வாக்குப் பணங்களின் கீழ்வரும் செலவு, மதிப்பீட்டைவிட 1162 இலட்சம் ரூபாய்களால் குறைவுற்றிருந்தது. மேலும் ஆராயும் போது, மீண்டு வரும் செலவில் உண்டான அதிகரிப்புகள், விவசாய உணவு மீன்பிடித் தொழில் அமைச்சு, கல்வி அமைச்சு ஆகியவற்றின் கீழேயே ஏற்பட்டுள்ளன என்பதும், மூலதனச் செலவில் ஏற்பட்ட வீழ்ச்சி, காணி நீர்ப்பாசன மின்சார அமைச்சினுலும், உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக விநியோக அமைச்சினுலும் செய்யப்பட்ட முறைச் செலவின் காரணத்தாலேயே ஏற்பட்டுள்ளதென்றும் புலப்படுகின்றது.

1963/64ம் ஆண்டிற்குரிய உண்மை (தற்காலிகமானவை) செலவு, 1962/63ம் ஆண்டிற்கான உண்மைச் செலவுத் தொகையுடனும் 1964/65ம் ஆண்டிற்குரிய மூல மதிப்பீடுகளுடனும் ஒப்பிடப்பட்டு, இவற்றிடையே உள்ள முக்கிய மாற்றங்கள், நடைமுறைச் செலவினதும், மூலதனச் செலவினதும் அடிப்படையில் மீளப் பாகுபடுத்தப்பட்டு கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

---

1. மதிப்பீடுகளில் காணப்படும் 1 2. 4. 6 ஆகிய வாக்குப் பணங்களின் கூட்டுத்தொகையிலிருந்து, ஆழ் நிதிகளுக்கு உதவிய தொகைகளேயும், பொதுப்படு கடனின் நேரடித் திருப்பிக் கொடுப்பனவுகளேயும் கணக்கேட்டுச் சீராக்கங்களேயும் நீக்கியது.
2. மதிப்பீடுகளில் உள்ளபடி வாக்குப் பணங்கள் 3, 5, 7 ஆகியவற்றின் கூட்டுத் தொகை.

அட்டவணை II எ—4

## அரசாங்கத்தின் செலவு

பத்து இலட்சம் ரூபாய்களில்

| வருடம் | நடைமுறைச் செலவு (1) | மூலதனச் செலவு (2) | | | மொத்தச் செலவு |
|---|---|---|---|---|---|
| | | மெய்ச் சொத்துக்களைக் கொள்ளுதல் ஆக்குதல் பராமரித்தல் | நிதிச்சொத்துக்களைக் கொள்ளுதல் அரசாங்க முகவர் நிலையங்களுக்குக் கொடுக்கும் கடன் உட்பட | மொத்த மூலதனச் செலவு | |
| 1960/61 .. .. .. | 1,471·3 | 471·9 | 47·2 | 519·1 | 1,990·7 |
| 1961/62 .. . .. | 1,498·1 | 499·4 | 86·2 | 585·6 | 2,083·0 |
| 1962/63 .. .. .. | 1,534·0 | 479·1 | 9·9 | 489·0 | 2,023·7 |
| 1963/64 மூலமதிப்பீடுகள் .. | 1,660·7 | 608·8 | 30·6 | 639·4 | 2,300·4 |
| உண்மையாக ஏற்பட்டவை (தற்காலிகமானவை) .. | 1,758·4 | 466·8 | 36·5 | 503·3 | 2,261·1 |
| 1964/65 (மூலமதிப்பீடுகள்) .. | 1,745·1 | 626·6 | 21·0 | 647·6 | 2,392·7 |

மூலம்: ஸ்ரீலங்கா மகாவங்கி

1. மீண்டுவரும் செலவுகளுக்கான வாக்குப் பணங்கள் 1, 2, 4, 6 ஆகியவற்றின் மொத்தத்திலிருந்து, அழ்நிதிக்கு உதவிய தொகையையும் அரசிறையிலிருந்து நேரடியாகக் கொடுக்க வேண்டிய பொதுக் கடனையும் நெடுங்கால உபயோகமுள்ள பொருட்களின் கொள்வனவு, பராமரிப்பு போன்ற மூலதனச் செலவுகளையும் நீக்கிய பின்னர் பெறப்படுவதுதான் நடைமுறைச் செலவாகும்.

2. மூலதனச் செலவு என்பதில் ஒரு வருடத்திற்கு மேலான உபயோகமுள்ள நிலையான இருப்புச் சொத்துக்களை ஆக்குவதற்கோ, கொள்ளுவதற்கோ, பராமரிக்கற்கோ, செலவான செலவுகளும், இ.போ.ச, துறைமுக (கப்பற் சரக்குக்) கூட்டுத்தாபனம், உள்ளூர்க் கடன்நிதி, அபிவிருத்தி நிதி ஆகியவற்றிற்கு வழங்கிய கடன்களால் ஏற்பட்ட நிதிச் சொத்துக்களும் அடங்கும். இவ் வரையறுப்பின்படியுள்ள மூலதனச் செலவு என்பதும், அபிவிருத்திச் செலவு என்பதும் ஒரு கருத்து உடையனவல்ல. ஏனெனில் அபிவிருத்தித் தன்மையில்லாத சில முதலீட்டுச் செலவு விடயங்கள் மூலதனச் செலவினுட் சேர்க்கப்பட்டிருப்பதோடு அபிவிருத்தித் தன்மையுடைய சில நடைமுறைச் செலவு விடயங்கள் சேர்க்கப்படவில்லை. மூலதனச் செலவு என்பது பின்வருவனவற்றைக் கொண்டுள்ளது:— மூலதனச் செலவிற்கான வாக்குப் பணங்கள் 3, 5, 7 ஆகியனவற்றின் செலவும், அன்னிய உதவிகளில் (கடன்கள், நன்கொடைகளில்) அறவிடப் படவேண்டிய செலவும், மீண்டுவரும் செலவிற்கான வாக்குப் பணங்களில் உள்ள மூலதனச் செலவு விடயங்களும், இரப்பர், தேயிலை மாற்று நடுகைக்கான மானியச் செலவு போன்ற வரவு செலவுத் திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவுகளும், மின்சாரத் திணைக்களத்தின் ஒதுக்குநிதிச் செலவுகளும், இவை போன்றனவும் ஆகும். வரவு செலவுத் திட்டத்திற்கு அமையாத செலவுகள், 1960-61ல் ரூபா 283 இலட்சமும், 1961-62ல் ரூபா 218 இலட்சமும், 1962-63ல் ரூபா 239 இலட்சமும், 1963-64ல் மதிப்பீட்டின்படி ரூபா 491 இலட்சமும், தற்காலிகமாக ரூபா 295 இலட்சமும், 1964-65ல் ரூபா 235 இலட்சமுமாக உள்ளன.

### நடைமுறைச் செலவு:

1963/64ம் ஆண்டிற்குரிய உண்மை நடைமுறைச் செலவுக்கான தற்காலிக எண் தொகைகள், அவ்வாண்டிற்குரிய மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் 977 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பைக் காட்டுகின்றன. உண்மை (தற்காலிகமான) செலவு, 1961/62ம் ஆண்டிலிருந்ததைவிட 1962/63ம் ஆண்டில் 359 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்துள்ளதை, 1963/64ம் ஆண்டிற்குரிய உண்மை (தற்காலிகமான) செலவு 1962/63ம் ஆண்டிற்குரியதைவிட 2244 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்துள்ளதுடன், ஒப்பிடற்குரியது. 1960/61ம் ஆண்டிற்கும், 1961/62ம் ஆண்டிற்குமான நடைமுறைச் செலவின் அதிகரிப்பு, முறையே 1059 இலட்சம் ரூபாய்களாகவும், 268 இலட்சம் ரூபாய்களாகவும் உள்ளது. 1963/64ம் ஆண்டின்போது, நடைமுறைச் செலவினது அதிகரிப்பில் பெரும் பங்கு, திரட்டப்பட்ட நிதியிலிருந்து பெறப்பட்ட அதிகரித்த உணவு மானியச் செலவாக விளங்குகையில், பொதுப்படுகடன் கல்வி, இளைப்பாறற் சம்பளம், சுகாதாரம் ஆகியவற்றின் வட்டியின் மீதான செலவின் அதிகரிப்புகள், கடந்த ஆண்டினை விட இவ்வாண்டில் மீண்டு வரும் செலவின் அதிகரிப்பைத் தூண்டின.

## அட்டவணை II ஏ—5

## பிரதான நடைமுறைச் செலவு விடயங்கள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | உண்மையான 1962/63 | உண்மையான (தற்காலிகமான) 1963/64 | மூல மதிப்பீடுகள் 1963/64 | மூல மதிப்பீடுகள் 1964/65 |
|---|---|---|---|---|
| 1. உணவு மானியங்கள் .. | 225·8‡ | 375·4‡ | 272·9 | 327·0 |
| 2. பொதுக் கடனில் வட்டி .. | 98·1 | 113·1 | 111·0 | 100·4 |
| 3. இளைப்பாறற் சம்பளம் .. | 115·4 | 130·0 | 126·9 | 135·8 |
| 4. கல்வி * .. | 291·6 | 315·0 | 303·0 | 315·9 |
| 5. சுகாதாரம் .. | 144·8 | 149·3 | 151·6 | 152·5 |
| 6. மொத்தம் (விடயங்கள் 1-5) .. | 875·7 | 1,082·8 | 965·4 | 1,031·6 |
| 7. மொத்த நடைமுறைச் செலவு .. | 1,534·0 | 1,758·4 | 1,660·7 | 1,745·1 |
| 8. 7ன் சதவீதப்படி 6 .. | 57·1 | 61·6 | 58·1 | 59·1 |

மூலம்: ஸ்ரீலங்கா மகாவங்கி

‡ இறைசேரிக் கணக்கு ஏடுகளில் கொடுக்கப்பட்ட தொகைகள் போல.

* கலாச்சாரத் திணைக்களத்தின் செலவையும் உள்ளடக்கும்.

1963/64ம் ஆண்டிற்குரிய தேறிய உணவு மானியச் செலவு, 1962/63ம்[1] ஆண்டிற்குரிய 2258 இலட்சம் ரூபாய்களுடன் ஒப்பிடுகையில், 3754 இலட்சம் ரூபாய்களாக விளங்கியது. தேறிய உணவு மானியச் செலவின் கடந்த நிதியாண்டுகளுக்குரிய தொடர்பான எண் தொகைகள், 1961/62ம் ஆண்டில் 2354 இலட்சம் ரூபாய்களாகவும், 1960/61ம் ஆண்டில் 2480 இலட்சம் ரூபாய்களாகவும், 1959/60ம் ஆண்டில் 1930 இலட்சம் ரூபாய்களாகவும் அமைந்திருந்தன. மொத்த நடைமுறைச் செலவின் வீதமாகக் கூறின், உணவு மானியங்கள் 1963/64ம் ஆண்டில் 21·3 சதவீதமானவற்றிற்கும், 1962/63ம் ஆண்டில் 14·8 சதவீதமானவற்றிற்கும், 1961/62ம் ஆண்டில் 15·7 சதவீதமானவற்றிற்கும், 1960/61ம் ஆண்டில் 16·9 சதவீதமானவற்றிற்கும் வகை கூறியுள்ளன. 3774 இலட்சம் ரூபாய்களைக் கொண்ட தேறிய உணவு மானியச் செலவு, விவசாய சேவை ஆணையாளரின் 20 இலட்சம் ரூபாய்கள் கொண்ட கழிவைத் தவிர்த்து 21·5 சதவீதமாக உள்ளது.

உணவு ஆணையாளரால் அளிக்கப்பட்ட தற்காலிகத் தரவுகளின் அடிப்படையிலே, 1963/64ம் ஆண்டிற்குரிய தேறிய உணவு மானியச் செலவின் விரிவான விபரமும், 1962/63ம் ஆண்டிற்கான[2] உண்மைத் தரவுகளும், விவசாய சேவை ஆணையாளரால் அனுமதியளிக்கப்பட்ட கழிவுகளுக்கு இடமளித்து, அட்டவணை II (ஏ) 6ல் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்விரண்டு வருடங்களுக்கிடையேயுள்ள மாற்றங்களும், இவ்வட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

1963/64ம் ஆண்டிற்குரிய இறக்குமதி செய்யப்பட்ட அரிசியினது விற்பனையில் ஏற்பட்ட நட்டத்தின் அதிகரிப்பிற்கு, அளிக்கக்கூடிய ஒரு காரணம், இறக்குமதி அரிசியினது இறக்குமதி செய்யப்பட்ட விலையில் ஏற்பட்ட அதிகரிப்பேயாகும். அரிசியின் சந்தர்ப்பத்தில், பர்மாவிலிருந்து பெற்ற அரிசியின் இறக்குமதி செய்யப்பட்ட சராசரிக் கொள்விலை, 1962/63ம் ஆண்டில் ஒரு நீண்ட தொன்னுக்கு 546 ரூபாய்களாக இருந்து, 1963/64ம் ஆண்டில் ஒரு நீண்ட தொன்னுக்கு 575 ரூபாய்களாக உள்ளது. ஒரு நீண்ட தொன்னுக்கு 29 ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பைக் காட்டு

1. இவ்வெண் தொகைகள், இறைசேரி ஏடுகளில் உள்ளபடியானவையாகும்.

2. உண்மை எண் தொகையிலிருந்து தற்காலிகமான எண்தொகை கணிசமான அளவு வேறுபடாதிருந்தால் மட்டுமே மேற்கூறிய இரண்டு பிரிவு எண்தொகைகளினதும் நேரடி ஒப்புவமை நியாயமானதாக இருக்கும்.

## அட்டவணை II எ—6

# 1963-64ம் ஆண்டின் உணவு மான்னியச் செலவு—1962-63ம் ஆண்டுடன் ஒப்பியல்பாக.

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1962/63 | 1963/64* | மாற்றம் | |
|---|---|---|---|---|
| 1. இறக்குமதி செய்யப்பட்ட அரிசி விற்பனையில் நட்டம் (மான்னியம்) (1) .. | 125·3 | 128·5 | — 3·2 | அதிகரித்த நட்டம் |
| 2. உள்ளூர் அரிசி விற்பனையில் நட்டம் (மான்னியம்) (1) .. | 283·2 | 295·6 | — 12·4 | அதிகரித்த நட்டம் |
| 3. உள்ளூர் வெங்காய விற்பனையில் மான்னியம் .. | 2·6 | 2·5 | + 0·1 | குறைவுற்ற நட்டம் |
| 4. விநியோகச் செலவும் ஏனைய செலவுகளும் .. | 26·3 | 36·6 | — 10·3 | அதிகரித்த நட்டம் |
| 5. மொத்தம் (1 முதல் 4 வரை) .. | 437·4 | 463·3 | | |
| 6. சீனி விற்பனையில் இலாபம் .. | 154·6 | 75·1 | — 79·5 | குறைவுற்ற இலாபம் |
| 7. கோதுமைமா விற்பனையில் இலாபம் .. | 27·0 | 1·0 | — 26·0 | குறைவுற்ற இலாபம் |
| 8. ஏனைய பொருட்கள் .. | 17·0 | 9·8 | — 8·1 | குறைவுற்ற இலாபம் |
| 9. மொத்தம் (6 முதல் 8 வரை) .. | 199·5 | 85·9 | | |
| 10. நிகர உணவு மான்னியத்தின் மொத்தம் (4 சய 8) .. | 238·0 (2) | 377·4 (2) | — 139·4 | அதிகரித்த நட்டம் |

மூலம்: ஸ்ரீலங்கா மகா வங்கி

* தற்காலிகமானவை.

(1) குறித்த அளவுள்ள அரிசியின் பேரிலுள்ள நட்டம் (மான்னியம்), பின்வருமாறு கணிக்கப்பட்டுள்ளது.
இறக்குமதி செய்யப்பட்ட அரிசி விற்பனையில் உள்ள நட்டம் (மான்னியம்) என்பது, அரசாங்கத்தின் சராசரி இறக்குமதிச் செலவிற்கும் உத்தரவு பெற்ற சில்லறை வியாபாரிகளுக்கான சராசரி விற்பனை விலைக்கும் இடையிலுள்ள வித்தியாசமாகும். இறக்குமதிச் செலவில், கொள்வனவு விலையும் கப்பற் கூலியும் பண்டகசாலைவரையான செலவுகளும் உட்படும்.
உள்ளூர் அரிசியின் விற்பனையில் உள்ள நட்டம் (மான்னியம்) என்பது, அரசாங்கத்தின் உள்ளூர் அரிசிக் கொள்வனவு விலைக்கும் உத்தரவாதம் பெற்ற சில்லறை வியாபாரிகளுக்கான சராசரி விற்பனை விலைக்கும் இடையிலுள்ள வேற்றுமையாகும்.
இறக்குமதி செய்யப்பட்ட அரிசியிலுள்ள நட்டம் நுகர்வோர் மான்னியமாக இருக்கையில், உள்ளூர் அரிசியில் உள்ள நட்டத்தில், நுகர்வோர் மான்னியமும் உற்பத்தியாளர் மான்னியமும் அடங்கும்.

(2) இவ்வெண் தொகைகளுக்கும், அட்டவணை II (எ) 5ல் உள்ள உணவு மான்னியத்தின் எண் தொகைகளுக்குமுள்ள வேறுபாடுகள் பின்வருமாறு:—

**1962/63** — பத்து இலட்சம் ரூபாய்கள்

| | | |
|---|---|---|
| 1. | இறைசேரித் தொகை .. | 225·8 |
| 2. | முற்பணக் கணக்குகளின் கீழ் நிதியிட்டப்பட்ட தொகையைக் கூட்டி .. | 12·7 |
| | உணவு அதிகாரியின் மதிப்பீடு .. | 238·5 |
| | நீக்கி .. | 13·2 |
| 3. | 1961-62ம் ஆண்டுக்கான விவசாய சேவை ஆணையாளரின் 147 இலட்சம் ரூபா கழிவை உள்ளடக்கிய உணவு அதிகாரியின் உண்மையான தொகை (தற்காலிகமாக) .. | 225·3 |
| 4. | மேலே 3வது விடயத்தில் காட்டப்பட்ட கழிவைத் தவிர்த்து .. | 14·7 |
| | | 240·0 |
| 5. | விவசாய சேவை ஆணையாளரால் 1962–63க்காக 1963-64ம் ஆண்டில் காட்டப்பட்ட கழிவைச் சேர்த்து .. | 2·0 |
| 6. | தேறிய மொத்த மான்னியம் .. | 238·0 |

**1963/64** — பத்து இலட்சம் ரூபாய்கள்

| | | |
|---|---|---|
| 1. | 1962-63ம் ஆண்டுக்கான 20 இலட்சம் ரூபாக் கழிவை உள்ளடக்கிய இறைசேரியினதும், உணவு அதிகாரியினதும் தற்காலிகமான தொகை .. | 375·4 |
| 2. | மேலே 1வது விடயத்தில் காட்டப்பட்ட கழிவைத் தவிர்த்து .. | 2·0 |
| 3. | தேறிய மொத்த மான்னியம் .. | 377·4 |

கின்றது. சீனுவிலிருந்து பெற்ற அரிசியின் இறக்குமதி செய்யப்பட்ட சராசரிக் கொள்விலையும், 1962/63ம் ஆண்டிற்குரிய ஒரு நீண்ட தொன்னுக்கு 541 ரூபாய்களிலிருந்து 1963/64ம் ஆண்டில் 565 ரூபாய்களுக்கு நீண்ட தொன் ஒன்றிற்கு 24 ரூபாய்களால் அதிகரித்துள்ளது. உள்நாட்டு அரிசியின் பெருமளவுக் கொள்வனவுகளும், விற்பனவுகளுமே, அவற்றின் அதிகரித்த நட்டத்திற்கு காரணமாகும்.

தேறிய உணவு மானியச் செலவின் அதிகரிப்பிற்குத் துணை செய்த மிகப் பெரிய ஒரு காரணி சீனி விற்பனை இலாபத்தின் 795 இலட்சம் ரூபாய்கள் கொண்ட குறைத்தலே யாகும். இது, வெள்ளைச் சீனியின் சில்லறை விற்பனை விலை மாற்றமடையாதிருக்கும்போது, இதன் கொள்விலை இந்நிதியாண்டின் போது அநேகமாக இரட்டித்து விட்டமையாலாகும். வெள்ளைச் சீனியின் இறக்குமதி செய்யப்பட்ட சராசரிக் கொள்விலை, 1962/63ம்[1] ஆண்டிற்குரிய நீண்ட தொன் ஒன்றுக்கு 637 ரூபாய்களுடன் ஒப்பிடுகையில், 1963/64ம் ஆண்டில், நீண்ட தொன் ஒன்றுக்கு 1135 ரூபாய்களாக உள்ளது.

கோதுமை மா விற்பனையினுற் பெற்ற இலாபம் 1963/64ம் ஆண்டில் 260 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியுற்றது. இது முக்கியமாக கோதுமை மாவின் சில்லறை விற்பனை விலை, இருத்தல் ஒன்றிற்கு 28 சதங்களிலிருந்து 23 சதங்களுக்கு ஐந்து சதங்களால் குறைக்கப்பட்டமையால் ஏற்பட்டது. வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட வழி முறைகளில், இது ஒன்ருகும். அவுஸ்திரேலியாவிலிருந்து பெற்ற கோதுமை மாவின் இறக்குமதி செய்யப்பட்ட விலையின் அதிகரிப்பு, 1962/63ம் ஆண்டில் நீண்ட தொன்னென்றுக்கு 481 ரூபாய்களிலிருந்து 1963/64ம் ஆண்டில் நீண்ட தொன்னென்றிற்கு 530 ரூபாய்களாக உள்ளது. இது இம் மூலத்திலிருந்து வரும் இலாபத்தின் வீழ்ச்சிக்கும் காரணமாக உள்ளது.

உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழ் 1963/64ம் ஆண்டிற்குரிய அரிசிக் கொள்வனவுகள், 1962/63ம் ஆண்டிலிருந்த 27,759,722 புசல்களுடன் ஒப்பிடுகையில் 29,175,794 புசல்களாக உள்ளன. இது 1,416,072 புசல்கள் கொண்ட அதிகரிப்பைக் காட்டுகின்றது.

## மூலதனச் செலவு:

1963/64ல் மூலதனச் செலவு வாக்குகளின் பேரிலான உண்மைச் செலவு (அதாவது வரவு செலவுத் திட்டச் செலவாகிய வாக்குப் பணங்கள் 3, 5. 7 ஆகியவற்றின் மொத்தம்) ரூபா 4002 இலட்சமாக இருந்தது. இதனேடு வரவு செலவுத் திட்டத்திற்கப்பாற்பட்ட செலவுகளாகிய தேயிலை, இரப்பர், புனர் நடுகை மானியச் செலவையும், மீண்டும் எழும் செலவினுளடக்கப்பட்ட மூலதன விடயங்கள் முதலியவற்றையும் சேர்ப்பின் 1963/64ற்கான மொத்த மூலதனச் செலவு ரூபா 5033 இலட்சமாக (தற்காலிகமானது) அமையும். இவ்வாண்டிற்கென அட்டவணை II (எ) 4 இல் தரப்பட்டுள்ள மூல மதிப்பீட்டிலும் பார்க்க இத்தொகை ரூபா 1361 இலட்சத்தால் குறைவானதாயும், 1962/63ற்கான உண்மைச் செலவிலும் ரூபா 143 இலட்சத்தால் உயர்ந்ததாயும் உள்ளது. கடந்த நிதி ஆண்டினேடு ஒப்பிடுகையில், மெய்ச் சொத்துக்களைக் கொள்ளுதல், ஆக்குதல், பராமரித்தல் சம்பந்தமான மூலதனச் செலவுகள் ரூபா 123 இலட்சத்தால் வீழ்ச்சி அடைந்தும், நிதிச் சொத்துக்களின் கொள்வனவு ரூபா 266 இலட்சத்தால் அதிகரித்தும் காணப்பட்டன. மெய்ச் சொத்துக்களின் கொள்வனவு, ஆக்கம் பராமரிப்பு ஒட்டிய வீழ்ச்சியை விளக்குவதற்கு போதியளவு விபாம் இன்னும் கிடைக்கவில்லை. அரசாங்க முகவரி நிலையங்களுக்கான கொடுகடன்களை உள்ளடக்கிய நிதிச் சொத்துக்களின் கொள்ளளவில் ஏற்பட்ட அதிகரிப்பு, பிரதானமாக தேசிய வீடமைப்பு நிதிக்கும் லேடி லொக்கோர் நிதிக்கும் அளிக்கப்பட்ட கொடுகடன்களின் காரணமாகவும், இலங்கை வங்கியின் பங்குதாரர்களுக்கு, சாதாரணப் பங்குகளை ஒட்டி, அளிக்கப்பட்ட நட்ட ஈட்டுக் கொடுப்பனவுகளின் காரணமாகவுமே ஏற்பட்டதாம்.

---

1. 1962/63ற்கான வெள்ளைச் சீனியின் சராசரி விலையினது மதிப்பீடு, 1963ற்குரிய ஆண்டறிக்கை பக்கம் 127ல் உள்ளபடி நீண்ட தொன் ஒன்றுக்கு 1193 ரூபாய்களிலிருந்து மேற்காட்டப்பட்டுள்ள, நீண்ட தொன் ஒன்றுக்கு 637 ரூபாய்களாகத் தற்போது திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

## முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகள்:

1963/64ம் ஆண்டின் போதுள்ள முற்பணக் கணக்குத் தொழிற் பாடுகள், 1962/63ம் ஆண்டின் ரூபா 137 இலட்சமான நிகர வரவுடன் ஒப்பிடுகையில் ரூபா 161 இலட்சம் கொண்ட நிகர வரவைக் காட்டின. ரூபா 161 இலட்சம் கொண்ட இந் நிகர வரவு, பிரதானமாக, இலங்கைக்கும் சீனவுக்குமிடையேயுள்ள வர்த்தகச் சென்மதி உடன்படிக்கையின் கீழ் இலங்கையின் பொறுப்புக்களில் ஏற்பட்ட ரூபாய் 610 இலட்ச அதிகரிப்பானது, அரசாங்கத் திணைக்களங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 459 இலட்சம் கொண்ட முற்பணங்களால் தேற்றப்பட்டு எழுந்த தொன்றாகும்.

## நிகரப் பணக்குறை

1963/64ம் ஆண்டின் உண்மையான நிகரப் பணக்குறையான ரூபா 4624 இலட்சம் அதன் அதேயாண்டிற்குரிய மூல மதிப்பிட்டுத் தொகையான ரூபா 4180 இலட்சத்தி லும் ரூபா 444 இலட்சத்தால் கூடியுள்ளது. அவ்வாண்டிற்கான மூல மதிப்புடன் ஒப்பிடும் போது, உண்மை நிகரப் பணக்குறையின் அதிகரிப்பிற்கு அரசிறையிலேற் பட்ட ரூபா 341 இலட்சம் கொண்ட வீழ்ச்சியும், முற்பணக் கணக்குத் தொழிற் பங்குகளின் மூலம் பெறப்பட்ட நிகர வரவுத் தொகையாகிய ரூபா 161 இலட்சத் தால் தேற்றப்பட்ட மொத்தச் செலவு அதிகரிப்பாகிய ரூபா 2650 இலட்சமுமே காரணமாம்.[1] இந்த அனுபவம் 1962/63ம் ஆண்டிலே அரசிறைச் சேர்க்கைகள் வீழ்ச்சியடைந்திருந்தும் மூல மதிப்பீடுகளின்படியான குறையிலும் உண்மை நிகரப் பணக்குறை, குறைவாக இருந்த அனுபவத்திற்கு முரணாக அமைந்துள்ளது. 1963/64ன் மூல மதிப்போடு ஒப்பிடுகையில் தோற்றும் மொத்தச் செலவின் அதி கரிப்பு மீண்டெழும் செலவின்[2] அதிகரிப்பாலேற்பட்டதாம். இம்மீண்டெழும் செலவு அதிகரிப்புத் தொகையாகிய ரூபா 1425 இலட்சம், மூலதனச் செலவின் ரூபா 1162 இலட்சம் கொண்ட வீழ்ச்சியால் தேற்றப்பட்டது. அவ்வாண்டின் மதிப் பீடுகளின் விகிதாச்சாரமாக எடுத்துரைப்பின், மீண்டெழும் செலவின் அதிகரிப்பின் அளவு 8·4 சதவீதமாகவும் மூலதனச் செலவு வீழ்ச்சியின் அளவு 22·5 சதவீதமாக வும் அமையும்.

1963/64க்குரிய நிகரப் பணக்குறை 1962/63க்குரிய நிகரப் பணக்குறையிலும் ரூபா 707 இலட்சத்தால் கூடியுள்ளது. இவ்வதிகரிப்பிற்கு ரூபா 1601 இலட்சம் கொண்ட அரசிறை அதிகரிப்பு முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகளின் பேரிலான நிகர வரவுகளின் ரூபா 24 இலட்சம் கொண்ட தொகை மூலதனச் செலவு வீழ்ச்சித் தொகையாகிய ரூபா 12 இலட்சம் ஆகியனவற்றால் தேற்றப்பட்ட மீண்டெழும் செலவின் அதிகரிப்புத் தொகையாகிய ரூபா 2354 இலட்சம் காரணமாகின்றது.

## பணக்குறை நிவர்த்திக்கான நிதியீட்டம்:

கீழ்காணப்படும் அட்டவணை II (எ) 7, நிகரப் பணக்குறை நிவிர்த்திக்கப்பட்ட முறையை மூலாதாரப் பாகுபாடு செய்து காட்டுவதுடன் நிகர நாணய விரிவு விளைவு களையும் முந்தைய நிதியாண்டுடன் ஒப்பிட்டுக் காட்டுகின்றது.

1963/64 நிதியாண்டிற்கான ரூபா 4624 இலட்சம் கொண்ட நிகரப் பணக் குறைக்கு வங்கிகளல்லா உள்நாட்டு மூலங்களிலிருந்து ரூபா 2061 இலட்சம் கொண்ட கடன் பாட்டினாலும், வங்கிகளிடமிருந்து ரூபா 1152 இலட்சக் கடன்பாட்டினாலும் ரூபா 968 இலட்சம் கொண்ட வெளிநாட்டு உதவி மூலமும் நிருவாகக் கடன்பாடு, ரூபா 11 இலட்சம் கொண்ட நிகரக் கடன் அடைப்பால் தேற்றப்பட்ட அரசாங்கப் பண மிச்சங்களின் ரூபாய் 454 இலட்சம் கொண்ட வீழ்ச்சியின் மூலமும் நிதியீட்டப் பட்டது.

சென்ற நிதி ஆண்டின் நிகரப் பணக்குறைவோடு 1963/64க்குரிய உண்மையான நிகரப் பணக்குறைவை ஒப்பிடும்போது, பின்னையது ரூபா 707 இலட்ச அதிகரிப் பைப் பதிவு செய்துள்ளது. இதற்குரிய காரணங்கள் இப்பகுதியின் தொடக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. இங்கு குறிப்பிடத்தக்கது என்னவெனில், இப்பணக்குறை வின் அதிகரிப்பில் பணவீக்கத் தாக்கத்தை இணைக்கிணையான ஐக்கிய அமெரிக்க

---

1. விடயப் பகுதிகளின், கூட்டுத் தொகை, எண்களை முழு எண்களாக மாற்றியதன் காரணத்தினால் மொத்தத் தொகையுடன் சமமாகாது

2. ஆழ்நிதிக் கடன் அளிப்புக்களையும் அரசிறையிலிருந்து அளிக்கப்பட்ட நேரடிக் கடன் கொடுப்பனவு களையும் தவிர்த்தவை.

அட்டவணை II எ—7

# பணக்குறை நிவர்த்திக்கு நிதியீட்டுதல்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1962/63 | | | 1963/64 (தற்காலிகமானவை) | | |
|---|---|---|---|---|---|---|
| 1. நிர்வாகக் கடன்பாடு .. .. | | | —33.8 | | | 1.1 |
| 2. அந்நிய உதவி (அ) கடன்கள் | | | | | | |
| (i) மொத்தத் தொகை .. .. | 68.7 | | | 75.7 | | |
| (ii) திருப்பிக் கொடுக்கப்பட்டவை நீக்கி .. | 6.3 | 62.4 | | 10.7 | 65.0 | |
| (ஆ) நன்கொடைகள் .. .. | | 31.1 | 93.5 | | 31.8 | 96.8 |
| 3. உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடு வங்கிகளல்லாத இதர மூலாதாரங்கள் | | | | | | |
| (அ) மொத்தத் தொகை ., .. | | 193.9 | | | 252.2 | |
| (ஆ) ஆழ்நிதிக்கு உதவிய தொகை நீக்கி .. | | 40.4 | 153.5 | | 46.1 | 206.1 |
| 4. உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடு—வங்கிகள் .. | | | 178.1 | | | 115.2 |
| 5. அரசாங்கப் பண மிச்சங்களின் வீழ்ச்சி—சய அடையாளம் அதிகரிப்பைக் குறிக்கும் .. .. | | | 0.4 | | | 45.4 |
| 6. நிகரப் பணக் குறை .. .. | | | 391.7 | | | 462.4 |
| 7. ஐக்கிய அமெரிக்க உதவியால் எழுந்த இணைக்கு இணையான உள்ளூர் நிதிகளின் வீழ்ச்சி—சய அடையாளம் அதிகரிப்பைக் குறிக்கும்.. .. | | | 16.5 | | | 2.3 |
| 8. வரவு செலவுத் திட்டத்தின் நிகர நாணய விரிவு விளைவு (4+5+7) .. .. | | | 162.0 | | | 162.9 |

மூலம்: ஸ்ரீலங்கா மகா வங்கி

உதவிநிதி வரவில் ஏற்பட்ட மாற்றத்திற்காக சிறு திருத்தங்களைச் செய்கையில் தேறிய பணக்குறைவின் அதிகரிப்போடு ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவு குறைந்தே காணப்பட்டது. 1962/63டோடு ஒப்பிடுகையில் 1963/64க்குரிய வரவு செலவுத் திட்டத்தின் பணவீக்கத்தின் தாக்கம் ரூபாய் 9 இலட்சமாக அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது. உள்நாட்டு வங்கிகள் அல்லாத மூலங்களில் இருந்து பெறத்தக்க கடன்களில் வைத்த அதிகரித்த நம்பிக்கையே வங்கித் தொழில் அமைப்புகளில் இருந்து அரசாங்கம் பெறும் கடனை ரூபாய் 629 இலட்சத்தால் குறைக்கச் செய்தது. எனினும் அரசாங்க நிதியீட்டம் அதிகரித்த மீதிப் பணமாகிய ரூபாய் 450 இலட்சத்தாலும், ஐக்கிய அமெரிக்க உதவிநிதி வீழ்ச்சியினாலும் ஈடுசெய்யப்பட்டது.

சென்ற நிதி ஆண்டோடு ஒப்பிடுகையில் வங்கத் தொழில் முறையில் இருந்து பெற்ற கடன் ரூபாய் 1152 இலட்சம் வரவேற்கத்தக்கதாய் இருக்கிறது. 1963/64ல் பெற்ற முழுக் கடனுள் ரூபாய் 1425 இலட்சம் மகா வங்கியில் இருந்து பெறப்பட்டது. அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட மகா வங்கியின் முற்பணங்களில் ஏற்பட்ட வீழ்ச்சியாகிய ரூபாய் 194 இலட்சத்தால் தேற்றப்பட்ட மகா வங்கிக்கு விற்கப்பட்ட இறைசேரி உண்டியல்களில் ஏற்பட்ட அதிகரிப்பில் ரூபாய் 1643 இலட்சம் கொண்ட தொகையே மகாவங்கியிடம் அரசாங்கம் அடைந்த கடன்பாடு கொண்டுள்ளது. வர்த்தக வங்கிகளிடம் இருந்து பெற்ற கடன்பாட்டினது வீழ்ச்சியானது வங்கிகள் கொண்டிருந்த ரூபாய் பிணைகளின் ஏற்பட்ட அதிகரிப்பாகிய ரூபாய் 278 இலட்சத்தால் தேற்றப்பட்ட வங்கிகள் கொண்டிருந்த இறைசேரி உண்டியல்களிலும் வரி ஒதுக்குப் பத்திரங்களிலும் ஏற்பட்ட வீழ்ச்சித் தொகைகளாகிய முறையே ரூபாய் 547 இலட்சத்தையும் ரூபாய் 4 இலட்சத்தையுமே கொண்டது. 1962/63டோடு ஒப்பிடுகையில் 1963/64ல் வங்கிகள் அல்லாத மூலங்களில் இருந்து பெற்ற நிகர சந்தைக் கடன் ரூபாய் 2061 இலட்சமாக விளங்குவதும் ஒரு திருத்தத்தைக் காட்டுகிறது. இது வங்கிகள் அல்லா மூலங்களில் இருந்து 1960/61லும் 1961/62லும் முறையே பெற்ற ரூபாய் 1652 இலட்சத்திலும் ரூபாய் 1094 இலட்சத்திலும் பார்க்க கூடியது. 1963/64ன் அதிகரித்த மொத்தத் தொகையில் தமது சேமிப்பனவுகளின் பங்குகளின் வளர்ச்சிக்கு, சேமிப்பு நிறுவனங்கள், ஊழியர் சேம நிதி, காப்புறுதி நிதிகள், (காப்புறுதி கூட்டுத்தாபனம் உட்பட) ஏனைய அரசாங்க கூட்டுத்தாபனங்களும், கூட்டு நிலையங்களும் கருவிகளாய் இருந்தன. உள்நாட்டுச்

சந்தையிற் பெற்ற கடன்பற்றிய ஆய்வும் ஆண்டுகளுக்கிடையில் ஏற்பட்ட மாற்றங்களும் 1963/64க்குரிய பொதுப்படுகடனில் வளர்ச்சியை விபரிக்கும் பகுதியில் தரப்பட்டுள்ளது.

கீழே குறிக்கப்பட்டுள்ள அட்டவணை II (ஏ 8 (திறைசேரி உண்டியல்களையும் வரி ஒதுக்கு நிதிப் பத்திரங்களையும் உள்ளடக்கிய) அரசாங்க பிணைக்களுக்கெனச் செய்யப்பட்ட அளிப்பனவுகளின் விபரத்தைத் தருகிறது. இது பெரிய வங்கிகளல்லாத முதலீடு செய்யும் குழுக்களின் அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை II எ—8

## பிரதான வங்கியல்லாத முதலீட்டக் குழுக்களின் அரசாங்கப் பிணைகளுக்கான உதவு தொகைகள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1962/63 | 1963/64 | தேறிய மாற்றம் |
|---|---|---|---|
| 1. சேமிப்பு நிலையங்கள் .. .. | 14·3 | 28·9 | 14·6 |
| 2. ஊழியர் சேமநிதி .. .. | 61·7 | 65·6 | 3·9 |
| 3. சேமநிதிகளும், ஓய்வுச் சம்பள நிதிகளும் .. .. | 31·2 | 22·0 | –9·2 |
| 4. காப்புறுத நிதிகள் ✱ .. .. | 22·4 | 36·6 | 14·2 |
| 5. ஏனைய அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் .. .. | — | 3·5 | 3·5 |
| 6. ஏனைய கூட்டு நிலையங்கள் .. .. | 5·0 | 12·2 | 7·2 |
| 7. இதர சங்கங்களும் நிலையங்களும் .. .. | 0·1 | — | –0·1 |
| 8. தனியாட்கள் .. .. | 0·1 | 1·3 | 1·2 |

மூலம்: ஸ்ரீலங்கா மகா வங்கி

✱காப்புறுதிக் கூட்டுத்தாபனங்களால் அளிக்கப்பட்ட உதவு தொகைகளும் உட்படும்.

### வெளிநாட்டுதவி:

இலங்கை பெற்ற மூலதனச் செலவுக்கான அந்நிய உதவிகள் 1962/63ம் ஆண்டின் ரூபா 998 இலட்சத்துடனும் 1961/62ம் ஆண்டின் ரூபா 626 இலட்சத்துடனும் 1960/61ம் ஆண்டின் ரூபா 296 இலட்சத்துடனும் ஒப்பிடுகையில் 1963/64ம் ஆண்டின் ரூபா 1075 இலட்சமாக விளங்கின. 1963/64, 1962/63, 1961/62, 1960/61 ஆகிய நான்கு வருடங்களின் போது வெளிநாட்டுக் கடன் திருப்பிக் கொடுப்பனவுகள்,

அட்டவணை II எ—9

## வெளிநாட்டு உதவி வருவாய்கள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1960/61 தேறிய வரவு | 1961/62 தேறிய வரவு | 1962/63 தேறிய வரவு | 1963/64 பெறப்பட்ட தொகை | 1963/64 திருப்பிக் கொடுபட்ட தொகை | 1963/64 தேறிய வரவு |
|---|---|---|---|---|---|---|
| கடன்கள்: | | | | | | |
| 1. ச.பு அ.வ. .. .. | 9·2 | 25·6 | 21 2 | 15·7 | 4·4 | 11·3 |
| 2. கனடா .. .. | — | – 1·3 | 0·8 | 1·0 | 1·2 | – 0·2 |
| 3. சீன .. .. | — | – 1·0 | — | 13·4 | 1·0 | 12·4 |
| 4. பிரிட்டன் .. .. | — | 3·3 | 11·9 | 9·0 | 2·6 | 6·4 |
| 5. ஐக்கிய அமெரிக்கா .. | 2·4 | 7·6 | – 0·7 | 3·8 | 1·1 | 2·7 |
| 6. ரூசியா .. .. | 1·8 | 3·4 | 13·5 | 32·0 | — | 32 0 |
| 7. மேற்கு ஜெர்மனி .. .. | — | — | 11·5 | 0·4 | — | 0·4 |
| 8. யூகோஸ்லேவியா .. .. | — | — | 4·3 | 0·5 | 0·4 | .... |
| நன்கொடைகள்; | | | | | | |
| கொழும்புத் திட்டம்: | | | | | | |
| (1) அவுஸ்திரேலியா .. | 3·8 | — | 2·5 | — | | — |
| (2) கனடா .. .. | 4·2 | 4·4 | 5·7 | 4·4 | | 4·4 |
| (3) நியுசிலாந்து .. .. | — | — | — | — | | — |
| ஏனையவை; | | | | | | |
| 1. சீன .. .. | — | 8·3 | 19·7 | 24·5 | | 24·5 |
| 2. ஐக்கிய அமெரிக்கா .. | 5·3 | 1·6 | 0·9 | 1·4 | | 1·4 |
| 3. மேற்கு ஜெர்மனி .. | — | 3·8 | 2·3 | — | | — |
| கடன்கள் நன்கொடைகளின் மொத்தம் .. | 26·6 | 55·8 | 93·5 | 107·5 | 10·7 | 96·8 |

மூலம்: ஸ்ரீலங்கா மகா வங்கி.

முறையே ரூபா 107 இலட்சமாகவும், ரூபா 63 இலட்சமாகவும், ரூபா 68 இலட்சமாக வும், ரூபா 30 இலட்சமாகவும், விளங்கின. வெளிநாட்டு உதவி நன்கொடைகள், (கீழேயுள்ள அட்டவணை II (எ) 9ப் பாரக்கவும்) ஆகியனவற்றின் நிகர வரவுகள் ஓர் அதிகரிப்பைக் காட்டினும் (இது இவை போன்ற வெளிநாட்டுதவிகளை அதி கரித்த அளவில் உபயோகப்படுத்துவது இயலுமென்பதைக் குறிக்கின்றது). முதலில் எதிர்பார்த்தவைகளுக்கும், உண்மையிற் தேறியதற்கும் இடையே எவ்வாறெனி னும் ஓர் வித்தியாசம் இருக்கவே செய்யும். வெளிநாட்டுதவியைப் பயன்படுத்து வதில் ஏற்படும் ஓர் குறைவு, உதவியின் வரவானது மூலதனச் செலவின் தொகைக்கு நிகராகக் கட்டுண்டிருக்கும் பட்சத்தில் பணக்குறை நிவர்த்திக்கு நிதியீட்டுவதில் வித்தியாசத்தைக் காட்டாது. எனினும் மூலதன ஆக்கத்தினதும், பொருளாதார வளர்ச்சியினதும் அடிப்படையில் நோக்கின், வெளிநாட்டுதவியைக் குறைவாக பயன் படுத்துவது கவலைக்கிடமான ஓர் விடயமாகும். 1960/61ம் ஆண்டு தொட்டு கிடைக் கப் பெற்ற வெளிநாட்டுதவி பற்றிய விபரங்கள் பின்வருமாறு: —

## பொதுப்படுகடன்:

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஏற்பட்ட பொதுப்படுகடன் சம்பந்தமான விபரங்கள், பின்னிணைப்பு IIல் உள்ள 24ம் அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளன. கடந்த ஐந்து நிதியாண்டுகளின் ஒவ்வொரு ஆண்டு முடிவிலும் இருந்த மொத்தப் பொதுப்படுகடன் தொகைகள் (உள்நாட்டினதும், வெளிநாட்டினதும்) கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை II எ—10

### மொத்தப் பொதுப்படுகடன் (1)

பத்து இலட்சம் ரூபாய்களில்

| புரட்டாதி முடிவில் | மொத்தக் கடன் | அதிகரிப்பு முந்திய நிதியாண்டிலிருந்து | தேறிய கடன் (ஆழ்நிதியின் பெறுமானம் நீக்கி) | அதிகரிப்பு முந்திய நிதி யாண்டி லிருந்து |
|---|---|---|---|---|
| 1960 .. .. .. | 2,230·4 | 393·4 | 1,912·8 | 392·1 |
| 1961 .. .. .. | 2,651·0 | 420·6 | 2,332·7 | 419·9 |
| 1962 .. .. .. | 3,038·9 | 387·9 | 2,688·9 | 356·2 |
| 1963 .. .. .. | 3,547·3 | 398·4 | 3,065·4 | 376·5 |
| 1964 .. .. .. | 3,787·4 | 350·1 | 3,436·0 | 370·6 |

மூலம்: ஸ்ரீலங்கா மகா வங்கி

1963/64ம் நிதியாண்டின் போது மொத்தக் கடன், நிகரக்கடன் ஆகியனவற்றில் ஏற்பட்ட அதிகரிப்புகள் முறையே ரூபா 3501 இலட்சமாகவும் ரூபா 3706 இலட்ச மாகவும் இருந்தன. சென்ற நிதியாண்டிற்கான இவற்றுடன் தொடர்புள்ள எண் தொகைகள், முறையே, ரூபா 3984 இலட்சமாகவும், ரூபா 3765 இலட்சமாகவும் இருந்தன. 1963/64ம் நிதி வருடத்தில் மொத்தக் கடனில் ஏற்பட்ட அதிகரிப்பு, கடந்த ஐந்து நிதி வருடங்களிற்கும் பதியப்பட்ட வருடாந்த அதிகரிப்பின் ஆகக் குறைந்ததொன்றாகும்.

மொத்தக் கடனில் ஏற்பட்ட ரூபா 3501 இலட்சம் கொண்ட அதிகரிப்பு, ரூபாப் பிணைகளில் உண்டான ரூபா 2258 இலட்ச அதிகரிப்பையும், இறைசேரி உண்டியல் களில் உண்டான ரூபா 1250 இலட்ச அதிகரிப்பையும், வரி—ஒதுக்கு நிதிப்பத்திரங் களில் உண்டான ரூபா 134 இலட்ச அதிகரிப்பையும், வெளிநாட்டுக் கடன்களிலுண் டான ரூபா 50 இலட்ச அதிகரிப்பையும், மகா வங்கியின் முற்பணங்களின் நிகரத் திருப்பிக் கொடுப்பனவாலுண்டான ரூபா 192 இலட்சம் கொண்ட வீழ்ச்சியையும் உள்ளடக்கிப் பெறப்பட்டதாம்.

1. இப்பொதுப்படுகடன் எண்தொகைகள் 1964 புரட்டாதி இறுதியில் ரூபா 750 இலட்சமாகவும், ரூபா ரூபா 433 இலட்சமாகவும் நின்ற தேசிய வீடமைப்புத் திணைக்களத்தின் தொகுதிக் கடன் முறிகளை யும் தேசிய ஈட்டு வங்கியின் தொகுதிக் கடன் முறிகளையும் உள்ளடக்குவன அல்ல.

**உள்நாட்டுக் கடன்:**

1963/64 நிதிவருட இறுதியிலுள்ளபடியான மொத்த உள்நாட்டுக் கடன் ரூபா 33753 இலட்சமாக இருந்தது. 1963/64ம் நிதியாண்டின் இறுதியிலுள்ளபடியான உள்நாட்டுக் கடனின் அமைப்பு, ரூபாய்ப் பிணைகளில் ரூபா 19094 இலட்சத்தையும், இறைசேரி உண்டியல்களில் ரூபா 12500 இலட்சத்தையும், வரி–ஒதுக்கு நிதிப் பத்திரங்களில் ரூபா 325 இலட்சத்தையும், மகா வங்கி முற்பணங்களில் ரூபா 1833 இலட்சத்தையும், தேசிய அபிவிருத்திப் பத்திரங்களில் ரூபா 1 இலட்சத்தையும் கொண்டு விளங்கியது. கீழ்க்காணப்படும் அட்டவணை உள்நாட்டுப் பொதுக் கடனின் அமைப்பிலுள்ள மாற்றத்தின் விபரங்களை 1962/63ம் ஆண்டிலிருந்தவற்றுடன் ஒப்பிட்டுக்காட்டுகிறன்து.

அட்டவணை II ஏ—11

**உள்நாட்டுப் பொதுப்படுகடனின் அமைப்பு**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| புரட்டாதி முடிவில் உள்ளபடி | ரூபாக் கடன்கள் | | | இறை சேரி உண்டி யல்கள் | வரி ஒதுக்கு நிதிப் பத்திரங் கள் | மகா வங்கி முற்ப ணங்கள் (2) | தேசிய அபிவிருத் திப் பிணை கள் (3) | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்த | ஆழ் நிதி கள் (1) | தேறிய | | | | | மொத்த | தேறிய |
| 1963 | 1683·6 | 276·3 | 1407·3 | 1125·0 | 19·1 | 202·5 | . . . | 3030·2 | 2753·9 |
| 1964 | 1909·4 | 312·8 | 1596·6 | 1250·0 | 32·5 | 183·3 | 0·1 | 3375·3 | 3062·5 |
| மாற்றம்(4) | +225·8 | +36·5 | +189·3 | +125·0 | +13·4 | —19·2 | +0·1 | +345.1 | +308·6 |

மூலம்; ஸ்ரீலங்கா மகாவங்கி

(1) ஆழ்நிதிகளுக்காக வைத்திருந்த முதலீட்டப் பொருட்களில் சந்தைப் பெறுமானத்தைக் குறிக்கும். (துணையான ஆழ்நிதிகளும் உட்படும்).

(2) 1963ம் ஆண்டு புரட்டாதி மாதம் 395 இலட்சம் ரூபாய்கள் கொண்ட தொகையும், 1964ம் ஆண்டு புரட்டாதி மாதம் 397 இலட்சம் ரூபாக்கள் கொண்ட தொகையுமான விசேட கடன்களும் உட்படும்.

(3) புரட்டாதி முடிவில், வெளியிட்டதும், வெளிநிற்பதுமான தேசிய அபிவிருத்திப் பிணைகளின் பெறுமானம். இது 1963ம் ஆண்டில், 36,320 ரூபாக்களாக விளங்கியது.

(4) சக அடையாளம் அதிகரிப்பைக் குறிக்கும்.

அட்டவணை II (ஏ) 12, 1964 புரட்டாதி 30ம் தேதிக்கான மொத்த உள்நாட்டுக் கடனின் முதிர்ச்சியின்படியான அமைப்பை, இவற்றுடன் தொடர்பான முன்னைய நான்கு நிதி வருடங்களுக்குரிய தரவுகளோடு தருகின்றது. இவ்வட்டவணை, உள்நாட்டுக்கடனின் தவணை அமைப்பு கடந்த நிதிவருடத்தின்போது நீடித்து அமைந்துள்ளதைக் காட்டுகின்றது. முதிர்ச்சித் தேதிக்கு 15 வருடங்களுக்கு மேலான தவணை கொண்ட உள்நாட்டுக் கடன் மொத்த உள்நாட்டுக் கடனின் விகிதாச்சாரமாக 30·9 சதவீதமாக அமைந்து, 1963/64ம் நிதியாண்டின்போது 2·9 சதவீதம் கொண்ட அதிகரிப்பைக் காட்டியுள்ளது. சார்பாக முதிர்வுத் தேதிக்கு 5 வருடங்களுக்குக் குறைந்த தவணை கொண்ட கடன் 3·1 சதவீதத்தால் வீழ்ச்சியுற்று, 1964 புரட்டாதி இறுதியில் மொத்த உள்நாட்டுக் கடனின் 49·5 சதவீதமாக இருந்தது.

**ரூபாய்ப் பிணைகள்:**

கீழ்க்காணும் அட்டவணை கடந்த ஐந்து நிதியாண்டுகளின் போது திரட்டப்பட்டதும் தீர்க்கப்பட்டதுமான கடன்களின் தொகைகளைக் காட்டுகின்றது.

| நிதி வருடம் | திரட்டப்பட்ட கடன்கள் | தீர்க்கப்பட்ட கடன்கள் |
|---|---|---|
| 1959/60 .. .. .. .. | 19,50,00,000 | 5,52,39,200 |
| 1960/61 .. .. .. .. | 26,95,83,200 | 8,97,48,800 |
| 1961/62 .. .. .. .. | 19,36,99,600 | 7,50,00,000 |
| 1962/63 .. .. .. .. | 22,13,25,700 | 5,30,81,000 |
| 1963/64 .. .. .. .. | 31,50,00,000 | 8,91,48,300 |

மூலம்; ஸ்ரீலங்கா மகா வங்கி

அட்டவணை II எ—12

## முதிர்ச்சி அடிப்படையில் உள்நாட்டுக் கடன் ஆய்வு

(புரட்டாதி முடிவில் உள்ளபடி)

| முதிர்ச்சி அடைவதற்குரிய ஆண்டுகள் (1) | 1960 | | 1961 | | 1962 | | 1963 | | 1964 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை 10 இலட்சம் ரூபாய்களில் | சதவீதம் | தொகை 10 இலட்சம் ரூபாய்களில் | சதவீதம் | தொகை 10 இலட்சம் ரூபாய்களில் | சதவீதம் | தொகை 10 இலட்சம் ரூபாய்களில் | சதவீதம் | தொகை 10 இலட்சம் ரூபாய்களில் | சதவீதம் |
| 5-க்குக் கீழ் .. .. .. | 1,050·5 | 54·2 | 1,218·6 | 52·0 | 1,451·1 | 53·9 | 1,592·8 | 52·6 | 1,671·8 | 49·5 |
| 5-க்கும் 10-க்குமிடையில் .. .. | 127·5 | 6·6 | 185·1 | 7·9 | 229·5 | 8·5 | 365·4 | 12·1 | 445·0 | 13·2 |
| 10-க்கும் 15-க்குமிடையில் .. .. | 295·0 | 15·2 | 230·2 | 9·8 | 180·2 | 6·7 | 222·9 | 7·4 | 216·6 | 6·4 |
| 15-க்கு மேல் .. .. . | 463·6 | 23·9 | 710·1 | 30·3 | 832·8 | 30·9 | 849·1 | 28·0 | 1,042·0 | 30·9 |
| மொத்தம் .. .. .. | 1,936·7 | 100·0 | 2,344·0 | 100·00 | 2,693·7 | 100·0 | 3,030·2 | 100·0 | 3·375·3 (2) | 100·0 |

மூலம்: ஸ்ரீலங்கா மகா வங்கி

(1) முதிர்ச்சி நிலையின் இறுதி நாள் வரை.

(2) வெளியிடப்பட்டதும், வெளிநின்றதுமான தேசிய அபிவிருத்திப் பிணைகளின் பெறுமானமாகிய 1 இலட்சம் ரூபாவை உள்ளடக்கும். முதிர்ச்சி நிலையடைவதற்கான குறிப்பிடப்பட்ட நாள் இல்லாமையினால், இத்தொகையை, மேற் காட்டப்பட்ட நான்கு பகுப்புகளுக்குள்ளும் பங்கிட முடியாது.

அட்டவணை II எ—13

## அரசாங்கப் பிணைகளுக்கெதிராகப் பெற்ற ஒப்பப்பண ஒதுக்கல்களின் பாகுபாடு 1963—64

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 4½% கடன், 1984–88 'டி' தொடர் | 14½% கடன், 1984–88 'ஈ' தொடர் | 4½% கடன் 1985–89 | 4½% கடன், 1985–89 'பீ' தொடர் | 4½% கடன், 1985–89 'ஸி' தொடர் | 4½% கடன், 1985–89 'டி' தொடர் | 3¾% கடன் 1974* | | 4½% கடன், 1985–89 'ஈ' தொடர் | 4½% கடன், 1985–89 'எப்' தொடர் | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | புதுப்பித்து மாற்றிய கடன் | பணம் | | | தொகை | சதவீதம் |
| வர்த்தக வங்கிகள் .. | 6·0 | — | — | 10·0 | 10·0 | 2·0 | — | — | 5·0 | — | 33·0 | 10·5 |
| சேமிப்பு நிலையங்கள் .. | 2·4 | 3·5 | 3·5 | 2·0 | 1·0 | 2·5 | 52·5 | — | 11·0 | 1·5 | 79·9 | 25·4 |
| ஆழ் நிதிகள் .. | 1·4 | 6·3 | 11·0 | 8·2 | 4·1 | 8·3 | — | — | 6·6 | 0·4 | 46·3 | 14·7 |
| துணைக்கள நிதிகளும், ஏனைய அரச கரும நிதிகளும் .. | 1·2 | 1·6 | 0·1 | 0·4 | 2·4 | — | 10·3 | — | 2·4 | 3·0 | 21·4 | 6·8 |
| நம்பிக்கைச் சொத்துக்களும், உபகாரச் சம்பள நிதிகளும், சேமநிதிகளும்: | | | | | | | | | | | | |
| (1) ஊழியர் சேமநிதி .. | 8·5 | 8·1 | 8·5 | 5·1 | 5·9 | 8·2 | — | — | 13·9 | 6·8 | 65·0 | 20·6 |
| (2) ஏனையவை .. | 2·0 | 6·2 | 2·9 | 1·1 | 1·3 | 1·6 | 1·1 | 1·9 | 3·1 | 4·6 | 25·8 | 8·2 |
| காப்புறுதி நிதிகள்: | | | | | | | | | | | | |
| (1) காப்புறுதிக் கூட்டுத்தாபனங்கள் .. | 2·5 | 1·0 | 3·3 | 3·1 | 4·2 | 4·9 | — | — | 7·3 | 2·7 | 29·0 | 9·2 |
| (2) காப்புறுதிக் கூட்டு நிலையங்கள் .. | 0·8 | 3·3 | 0·6 | — | 0·9 | 0·5 | 0·4 | 1·8 | — | 0·6 | 8·9 | 2·8 |
| ஏனைய அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் .. | — | — | — | — | — | 1·9 | — | 1·6 | — | — | 3·5 | 1·1 |
| ஏனைய கூட்டு நிலையங்கள் .. | — | — | 0·1 | — | — | — | ... | ... | — | 0·2 | 0·3 | 0·1 |
| தனியாட்களும், சங்கங்களும் நிலையங்களும் | 0·1 | ... | 0·1 | ... | 0·2 | ... | 0·2 | 0·1 | 0·7 | 0·3 | 1·7 | 0·5 |
| மொத்தம் .. | 25·0 | 30·0 | 30·0 | 30·0 | 30.0 | 30·0 | 64·5 | 5·5 | 50·0 | 20·0 | 315·0 | 100·0 |

மூலம்: ஸ்ரீலங்கா மகாவங்கி

* ஆடி மாதம் 15ம் திகதி 1964ம் ஆண்டு திருப்பிக் கொடுக்க வேண்டிய, இலங்கை அரசாங்கத்தின் 3¾% 1964 கடனைப் புதுப்பித்து மாற்றி இக்கடன் பெறப்பட்டது.

1963/64ம் நிதியாண்டின் போது வெளியிடப்பட்ட 3150 இலட்சம் ரூபாய்கள் கொண்ட ரூபாய் கடனில் 700 இலட்ச ரூபாய் புதுப்பித்து மாற்றிய கடன்களாய் இருக்கையில் மொத்தமாக 2450 இலட்சம் ரூபாய்களைக் கொண்ட எஞ்சிய எட்டுக் கடன்களும் பணவெளியீடுகளாக விளங்கின. ஆடி 1964ல் திருப்பிக் கொடுக்கவேண்டிய ரூபாய் 700 இலட்சம் பெறுமதி வாய்ந்த $3\frac{3}{4}$ சதவீத 1964 கடனுக்காக அதன் ஒரு பகுதியாக $3\frac{3}{4}$ சதவீத மாற்றுதல் முறையாக 1974ம் ஆண்டிற்குரிய ரூபாய் 700 இலட்சம் வெளியிடப்பட்டது. $3\frac{3}{4}$ சதவீத கடனுக்காக ரூபாய் 645 இலட்ச பெறுமதியான முதிர்ச்சி அடையும் கடன் இருப்பு கொடுக்கப்பட்டது. மிகுதி பணமாக கொடுக்கப்பட்டது. வெளியிடப்பட்ட ஏனைய 8 வெளியீடுகளும் பணமாகவே வழங்கப்பட்டன.

வெவ்வேறுக ஒதுக்கப்பட்ட ஒரு பகுப்பினை அட்டவணை II (எ) 13 காட்டுகிறது. வழங்கப்பட்ட கடன்களில் 1962/63 கால எல்லையில் சேமிப்பு நிறுவனங்கள் உள்ளடக்கிய தொகை ரூபாய் 173 இலட்சமாக அல்லது 7·8 சதவீதமாக விளங்கியது. ஒப்பு நோக்குகையில் 1963/64 கால எல்லையில் கடனுகை இவை ரூபா 799 இலட்சத்தை அல்லது 25·4 சதவீதத்தை ஆட்கொண்டன. 1963/64 கால எல்லையில் வெளியிடப்பட்ட மிகுதி ரூபாய் 2350 இலட்சம் கொண்ட கடன்கள் பின்வரும் முறையில் கொள்ளப்பட்டன. ஊழியர் சேமநிதி ரூபாய் 650 இலட்சம் (21 சதவீதம்) ஆழ்நிதிகள் ரூபாய் 463 இலட்சம் (15 சதவீதம்) வர்த்தக வங்கிகள் ரூபாய் 330 இலட்சம் (11 சதவீதம்) காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ரூபாய் 290 இலட்சம் (9 சதவீதம்) ஊழியர் சேமநிதி தவிர்ந்த நம்பிக்கை உபகார, இளைபாறற் சேமநிதிகள் ரூபாய் 258 இலட்சம் அல்லது (8 சதவீதம்) வர்த்தக வங்கிகள் வைத்திருந்த தனியாரது தவணை சேமிப்பு வைப்புகள் ரூபாய் 565 இலட்சமாக அதிகரித்தும் வங்கிகள் அல்லாத முதலீடு செய்வோரின் அரசாங்க பிணைகளின் கொள்வனவு 1963/64 கால எல்லை நிதி ஆண்டில் தொடர்ந்து திருந்தியது. 1962/63, 1963/64 கால எல்லையில் இக் கடன்களுக்காகிய பண மூலாதாரங்களின் அடிப்படையிலும், அவற்றின் ஒப்பியல்பான அடிப்படையிலும் பகுக்கப்பட்ட அரசாங்க பிணைகளை கீழ்காணும் அட்டவணை காட்டுகிறது.

அட்டவணை II எ—14

## 1962—63ம் ஆண்டிலும் 1963—64ம் ஆண்டிலும், அரசாங்கப் பிணைகளில் செய்யப்பட்ட ஒதுக்கல்களின் ஒப்பீடும் பாகுபாடும்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1962/63 | | 1963/64 | | மாற்றம் |
|---|---|---|---|---|---|
| | தொகை | % | தொகை | % | தொகை |
| வர்த்தக வங்கிகள் .. .. | 25·4 | 11·5 | 33·0 | 10·5 | + 7 6 |
| கூட்டுறவு மாகாண வங்கிகள் .. .. | 0·3 | 0·1 | – | – | – 0·3 |
| சேமிப்பு நிலையங்கள் .. .. | 17·3 | 7·8 | 79·9* | 25·4 | +62·6 |
| ஆழ்நிதிகள் .. .. | 36·4 | 16·4 | 46·3 | 14·7 | + 9·9 |
| திணைக்கள நிதிகளும், ஏனையஅரசகரும நிதிகளும் | 7·5 | 3·4 | 21·4 | 6·8 | +13·9 |
| நம்பிக்கைச் சொத்துக்களும், சேமநிதிகளும் உபகாரச் சம்பள நிதிகளும் | | | | | |
| (1) ஊழியர் சேமநிதி .. .. | 67·8 | 30·6 | 65·0 | 20·6 | – 2·8 |
| (2) ஏனையவை .. .. | 36·6 | 16·5 | 25·8 | 8·2 | – 10·8 |
| காப்புறுதி நிதிகள் | | | | | |
| (1) காப்புறுதிக் கூட்டுத்தாபனங்கள் .. | 12·9 | 5·8 | 29·0 | 9·2 | +16·1 |
| (2) காப்புறுதிக் கூட்டு நிலையங்கள் .. | 13·4 | 6·1 | 8·9 | 2·8 | – 4·5 |
| ஏனைய அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் .. | – | – | 3·5 | 1·1 | + 3·5 |
| ஏனைய கூட்டு நிலையங்கள் .. .. | 0·8 | 0·4 | 0·3 | 0·1 | – 0·5 |
| தனியாட்களும், சங்கங்களும், நிலையங்களும் .. | 3·2 | 1·4 | 1·7 | 0·5 | – 1·5 |
| மொத்தம் .. .. | 221·3 | 100·0 | 315·0 | 100·0 | +93·7 |

மூலம்; ஸ்ரீலங்கா மகாவங்கி

* இத்தொகையில் ரூபா 525 இலட்சம் $3\frac{3}{4}$% (புதுப்பித்து மாற்றிய) 1974 கடனுக்காக ஒதுக்கப்படும் தொகையாகும்.

### முதிர்ச்சியும் வீதப்பாகுபாடும்:

முதிர்ச்சி அடிப்படையிலான பாகுபாட்டின்படி 21 ஆண்டுகளிலிருந்து 25 ஆண்டுகள் வரைக்குமான ரூபாய் 2450 இலட்சம் கொண்ட எட்டுக் கடன்கள் வெளியிடப்பட்டன. இக்கடன்கள் அனைத்தும் ஆண்டிற்கு $4\frac{1}{2}$ சதவீத வட்டியுடன் வெளியிடப்பட்டன. ஆனி 1963 தொட்டு இத்தகைய கடன்களுக்கு மேற்குறித்த சதவீத வட்டியே குறிக்கப்பட்டது. பத்தாண்டிற்குரிய மாற்றுக் கடன் ஆண்டு ஒன்றிற்கு $3\frac{3}{4}$ சதவீத வட்டியில் வெளியிடப்பட்டது.

### இறைசேரி உண்டியல்கள்:

நிதி ஆண்டின் தொடக்கத்தில் வெளியிடப்பட்டதும் நிலுவையில் நின்றதுமான இறைசேரி உண்டியல்களின் அளவு ரூபாய் 11250 இலட்சமாக விளங்கியது. இறைசேரி உண்டியல்களின் சட்டபூர்வமான எல்லை கூட ரூபாய் 11500 இலட்சமாகவே இருந்தது. 1963ம் ஆண்டிற்குரிய நிதிச்சட்ட எண் 11 பிரிவு 116 உள்ளடக்கத்தின்படி சட்டபூர்வமான எல்லை ரூபாய் 1000 இலட்சத்தால் உயர்த்தப்பட்டு ரூபாய் 12500 இலட்சமாக விளங்கியது. மீண்டும் 28-8-64ல் பாராளுமன்றத்திதின் தீர்மானம் ஒன்றினல் இவ் இறைசேரி உண்டியல்களின் சட்டபூர்வமான எல்லை ரூபாய் 2500 இலட்சத்தால் உயர்த்தப்பட்டு ரூபாய் 15,000 இலட்சமாக விளங்கியது. நிதி ஆண்டின் முடிவாகிய 30–9–64 வெளியிடப்பட்டதும் நிலுவையில் நின்றதுமான இறைசேரி உண்டியல்களின் தொகை ரூபாய் 12500 இலட்சமாக விளங்கியது. இது இந்நிதியாண்டின்போது ஏற்பட்ட ரூபாய் 1250 இலட்ச அதிகரிப்பைக் காட்டுகிறது. ஆகவே நிதி ஆண்டின் போது இறைசேரி உண்டியல் வெளியீட்டு எல்லைக்குள் அடங்கத்தக்க பயன்படுத்தப்படாத மீதியாகிய ரூபாய் 2500 இலட்சம் மிச்சம் இருந்தது.

மகா வங்கியினது இருப்புக்களாகிய இறைசேரி உண்டியல்கள் 30–9–64ல் ரூபாய் 1 532 இலட்சமாக (நிலுவையில் நின்ற மொத்தத்தில் 92·2 சதவீதம்) விளங்கியது. ஒப்பிட்டு நோக்கின் 30–9–63ல் இது ரூபாய் 9889 இலட்சமாக (87·9 சதவீதமாக) இருந்தது குறிப்பிடத்தக்கது.

நாம் இங்கு ஆராயும் நிதி ஆண்டின் இறைசேரி உண்டியல்களின் வட்டி விகிதத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. இவ்வட்டி விகிதம் ஆண்டிற்கு 2·80 சதவீதமாக விளங்கியது. இறைசேரி உண்டியல்களுக்கு மகா வங்கி வழங்கிய உதவி ஒரு ஆண்டிற்கு 0·76 சதவீதமாகவே விளங்கியது. அரசாங்க வரவு செலவுத் திட்டத்தின் அமுக்கத்தைக் குறைப்பதற்கே இவ் வழிமுறை உருவாக்கப்பட்டது.

### வெளிநாட்டுக் கடன்:

1962/63க்கான மொத்த வெளிநாட்டுக் கடனின் (திருப்பிக் கொடுப்பனவுகளைக் கழித்த பின்) அதிகரிப்பாகிய ரூபா 619 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் இக்கடன் 1963/64ல் ரூபா 50 இலட்சம் கொண்ட அதிகரிப்பைக் காட்டியுள்ளது. 1963/64க் கான அதிகரிப்பு கீழ்க்காணும் அட்டவணை II (எ) 15ல் பாகுபடுத்தப்பட்டுள்ளது.

அட்டவணை II எ—15

**அந்நிய கடன்கள்**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1963/64 ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு | 1964 புரட்டாதி 30ல் உள்ளபடியான தேறிய பொறுப்பு |
|---|---|---|
| சர்வதேச புனருத்தாரண அபிவிருத்தி வங்கி | 11·3 | 134·7 |
| கனடிய கடன்கள் | — 0·2 | 8·9 |
| சீனக் கடன் | 12·4 | 21·6 |
| பிரித்தானிய கொடுகடன் வசதி | 6·4 | 21·7 |
| பிரித்தானிய ஸ்டேர்லிங் பிணைகள் | —60·0 | 107·9 * |
| அபிவிருத்திக் கடனுதவி நிதித்தாபனம் (ஐக்கிய அமெரிக்க) | — 0·8 | 11·7 |
| சர்வதேச கூட்டுதவி ஆட்சித்தாபனம் (ஐக்கிய அமெரிக்க) | 3·6 | 35·2 |
| ரூசியக் கடன் | 32·0 | 54·3 |
| மேற்கு ஜெர்மனிக் கடன் | 0·4 | 11·8 |
| யூகோஸ்லேவியாக் கடன் | ... | 4·3 |
| மொத்தம் | 5·0 | 412·1 * |

மூலம்: ஸ்ரீலங்கா மகா வங்கி

*ஸ்டேர்லிங் பிணைகளை மீட்பதற்காக வைத்திருந்த ஆழ்நிதிகள் 386 இலட்சம் ரூபாக்களாக விளங்கியது. இவ்வாழ்நிதிகளைச் சரிப்படுத்தியபின், தேறிய பொறுப்பு 3735 இலட்சம் ரூபாக்களாகும்.

## ஆழ்நிதிகள்:

நிதியாக்கம் பெற்ற பொதுப்படுகடன்களை மீட்பதற்காக உள்ள ஆழ்நிதிகளின் சந்தைப் பெறுமானம் 1963/64ம் நிதியாண்டின் இறுதியில் ரூபா 3514 இலட்சமாக இருந்தது. 1962/63ம் நிதியாண்டிறுதியிற் பெறப்பட்ட தொகையுடன் ஒப்பிடும் பொழுது இது ரூபா 205 இலட்சம் கொண்ட வீழ்ச்சியைப் பிரதிபலிக்கின்றது. இவ் வீழ்ச்சி பெறப்பட்ட விதம் பின்வறுமாறு:—

| | பத்து இலட்சம் ரூபாய்களில் |
|---|---|
| கடன்களைத் திருப்பிக் கொடுப்பதற்கு ஆழ்நிதியிலிருந்து எடுக்கப்பட்ட தொகை .. | 79·1 |
| அரசாங்கத்தின் பெயரில் வரவு வைக்கப்பட்ட ஆழ்நிதியிலிருந்த மிகை .. | 3·0 |
| | 82·1 |
| *நீக்கம்:—* | |
| ஆழ்நிதிக்கு உதவப்பட்ட தொகைகள் .. .. .. | 46·0 |
| ஆழ்நிதிகளின் முதலீடுகளின் மூலமான வட்டி .. .. .. | 14·8 |
| முதலீடுகளின் சந்தைப் பெறுமானத்திலேற்பட்ட உயர்வு .. .. | 0·8 |
| நிகர வீழ்ச்சி .. | 20·5 |

அரசாங்க ஆதிக்கமுள்ள நிலையங்களின் கடன்பாடு கிடைக்கப் பெறும் நிதி வளங்களை அரசாங்கத் தேவைகளுக்காக வழிப்படுத்தலும், தேசிய வீடமைப்பு ஆணையாளருக்கும், தேசிய ஈட்டு வங்கிக்கு தேவைகளைப் பொறுத்தும், அரசாங்க நிதி நிலைமையைப் பொறுத்தும் கடன் நிதிகளிலிருந்தும் கடன் வழங்கல் வேண்டுமென்று அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறுவதுமான கடந்த நிதியாண்டில் கடைப்பிடிக்கப்பட்ட அதே கொள்கைகளை மகா வங்கி மீண்டும் கடைபிடித்தது.

### (i) தேசிய வீடமைப்புத் திணைக்களம்.

1963/64ம் ஆண்டில் தேசிய வீடமைப்புக் கடன் முறிகள் யாதாயினும் வெளியிடப்படவில்லையாயினும், தேசிய வீடமைப்பு ஆணையாளருக்கு ரூபா 150 இலட்சம் கொண்ட நேரடிக் கடனொன்றை அரசாங்கம் அங்கீகரித்தது. ஆகவே 1963/64 நிதியாண்டிறுதியில் வெளியிடப்பட்டதும், நிலுவையில் வெளி நின்றதுமாகிய தேசிய வீடமைப்புத் தொகுதிக் கடன் முறிவுகளின் மொத்தத் தொகை ரூபா 750 இலட்சத்தில் நிற்க அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நேரடிக் கடன் தொகை ரூபா 150 இலட்சத்தால் அதிகரித்து ரூபா 700 இலட்சமாகிற்று. தேசிய வீடமைப்புத் தொகுதிக் கடன் முறிவுகளை மீள்வதற்காக ஏற்படுத்தப்பட்ட சந்தைப் பெறுமானமும் ரூபா 233 இலட்சமாக இந்நிதியாண்டின் முடிவில் இருந்தது.

### (ii) தேசிய ஈட்டு வங்கி.

1963/64ம் ஆண்டிற் தேசிய ஈட்டு வங்கித் தொகுதிக் கடன் முறிகள் ஒன்றும் வெளியிடப்படவில்லை. தனது தொழிற்பாடுகளை நடாத்துவதற்கு இவ்வங்கி பெருமளவில் மேலதிகப் பற்று வசதிகளை நாடியது. தேசிய ஈட்டு வங்கி அதிகாரச் சட்டத்தின் 35ம் பிரிவின் கீழ், இவ்வங்கி பெறக்கூடிய மொத்தக் கடன்களின் வரையறுக்கப்பட்ட எல்லை, ரூபா 26 இலட்சத்தால் அதிகரித்து 1963/64ல் ரூபா 676 இலட்சமாக இருந்தது. $2\frac{1}{2}$ சதவீத வட்டிக்குரிய 1962/64க்கான ரூபா 5 இலட்சம் கொண்ட தேசிய ஈட்டு வங்கித் தொகுதிக்கடன் முறிகளும் கடந்த நிதியாண்டில் திருப்பிக் கொடுக்கப்பட்டன. இதன் பயனாக, வெளியிடப்பட்டதும், நிலுவையில் வெளிநின்றதுமான தொகுதிக் கடன் முறிகள் தொகை ரூபா 333 இலட்சமாக குறைக்கப்பட்டது. உத்தரவாதமளிக்கப்பட்ட மேலதிகப் பற்றுக்கள் 1964 புரட்டாதி 30 தேதி ரூபா 243 இலட்சமாக இருந்து, நிதியாண்டின் இறுதிக்கான வங்கியின் மொத்தக் கடன்பாட்டுத் தொகையை ரூபா 576 இலட்சங்களுக்குக் கொண்டு வந்தது. இதன்படி வங்கியின் பயன்படுத்தப்படா அங்கீகரிக்கப்பட்ட கடன்பாடு ரூபா 100 இலட்சமாக இந்நிலையில் இருந்தது.

மகா வங்கியின் பிணைகளின் வெளியீடு.

நாணய அதிகாரச் சட்டத்தின் (தலைப்பு 422) 91 (1) (ஆ) பிரிவின் கீழ் 1964 மாசி முதலாம் தேதி ரூபா 534 இலட்சம் தொகையுடைய $4\frac{1}{2}$ சதவீத வட்டிக்குரிய மகா வங்கிப் பிணைகள் (1985–89) வெளியிடப்பட்டன.

## 1964—65க்கான வரவு செலவுத் திட்டம்:

பாராளுமன்றத்திஞல் அங்கீகரிக்கப்பட்டபடி 1964–65ம் ஆண்டிற்கான வரவு செலவுகளின் மூல மதிப்பீடுகள் பின்வருமாறு:

அட்டவணை II எ—16

### மூல வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | | | |
|---|---|---|---|
| (அ) | மீண்டுவரும் செலவு (வாக்குப் பணங்கள் 1, 2, 4, 6 ஆகியன) .. | 1879·4 | |
| | 2½ சதவீதக் குறைச் செலவை நீக்கி .. .. | 47·0 | 1832·4 |
| (ஆ) | மூலதனச் செலவுகள் (வாக்குப் பணங்கள் 3, 5, 7 ஆகியன) .. | | 558·0 |
| (இ) | மொத்தச் செலவு (அ + ஆ) .. .. | | 2390·4 |
| (ஈ) | அரசிறை (புதிய வருமானங்களும் உட்பட) .. .. | | 1881·4 |
| (உ) | வரவு செலவுத்திட்டக் குறை (இ—ஈ) .. .. | | 509·0 |
| (ஊ) | ஆழ்நிதிக்கு உதவிய தொகையும், நேரடியாகத் திருப்பிக் கொடுக்கப்பட்ட பொதுப்படு கடனும் நீக்கி .. .. | | 68·3 |
| (எ) | மதிப்பிடப்பட்ட நிகரப் பணக் குறை (உ—ஊ) .. .. | | 440·7 |

மூலம்; ஸ்ரீலங்கா மகா வங்கி

ரூபா 5090 இலட்சம் கொண்ட வரவு செலவுத் திட்டக் குறைக்கு நிதியீட்டுவதற்கான வழிவகைகள் பின்வறுமாறு தரப்பட்டுள்ளன:—

| | | | |
|---|---|---|---|
| (அ) | சந்தைக் கடன்பாடு | ரூபா 2500 | இலட்சம் |
| (ஆ) | அந்நிய உதவி | ,, 222 | ,, |
| (இ) | நிர்வாகக் கடன்பாடு | ,, 35 | ,, |

இவை மூன்றும் எதிர்பார்க்கப்படும் குறைக்கு முழுதாக நிதியீட்டப்பட்டுள்ளனவாம் இதன் காரணமாக பணவீக்க மூலங்களிலிருந்ததான நிதியீட்டம் ஏதும் இல்லே.

### அரசிறை:

1964/65ம் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட மொத்த அரசிறை ரூபா 18814 இலட்சமாகும். இது வரவு செலவுத் திட்டத்தில் வழிவகுக்கப்பட்ட நிகர வரவுகளாகிய ரூபா 1060 இலட்சத்தையும் உட்படுத்தியதாகும். 1963/64ம் ஆண்டின் உண்மையான (தற்காலிகமானவை) அரசிறையாகிய ரூபா 17535 இலட்சத்தோடு இதை ஒப்பிடுகையில் நடைமுறை வருடத்திற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் ரூபா 1279 இலட்சம் கொண்ட அதிகரிப்பைக் காட்டுகின்றன.

வரவு செலவுத் திட்டத்தில் வழி வகுக்கப்பட்ட புதிய அரசிறை நடவடிக்கைகளும், இவற்றை முழு வருடத்திலும் செயற்படுத்தும் போது கிடைக்குமென எதிர்பார்க்கப்படும் மேலதிகமான அரசிறையும் கீழே தரப்பட்டுள்ளன.

| | | பத்து இலட்சம் ரூபாய்களில் |
|---|---|---|
| 1. | வருமான வரி (அபிவிருத்தி வரிக் கழிவின் குறைப்பு) .. .. | 1·6 |
| 2. | செல்வ வரி .. .. .. .. | 11·5 |
| 3. | பெட்ரோலியப் பொருட்களின் மீதான இறக்குமதித் தீர்வைகள் .. .. | 15·0 |
| 4. | தேயிலே .. .. .. .. | 12·0 |
| 5. | இரத்தினக் கற்கள் மீதான ஏற்றுமதித் தீர்வைகள் .. . .. | ·2 |
| 6. | சிகரெட் புகையிலேயின் உள்நாட்டு வரி .. .. .. | 1·6 |
| 7. | இரத்தினக் கற்கள் கூட்டுத்தாபனம் .. .. .. .. | 10·0 |
| 8. | முத்திரைக் காரியாலயம் .. .. .. .. | 1·0 |
| 9. | ஏனைய மூலங்களிலிருந்து பெறப்படும் அரசிறை (விவரங்கள் குறிப்பிடப்படவில்லே) | 60·0 |
| | மொத்தம் (1லிருந்து 9 வரை) .. .. .. .. | 113·0 |

வரவு செலவுத் திட்டத்தில் கூறப்பட்ட இரு வழிவகைகளைப் பூரணமாகச் செயற்படுத்தும் போது ரூபா 64 இலட்சம் கொண்ட வீழ்ச்சியை அவை கொண்டு வருமென்று எதிர்பார்க்கப்பட்டமையால், அரசாங்கத்திற்கான நிகர அரசிறை ரூபா 1066 இலட்சமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்விரு வழிவகைகளும் அவற்றிற்குரிய தொகைகளும் கீழே தரப்பட்டுள்ளன.

| | | பத்து இலட்சம் ரூபாய்களில் |
|---|---|---|
| 1. | குறைந்த வருமானம் படைத்தோர் தொகுதிகளுக்களிக்கப்பட்ட வரிச்சலுகை .. | 3.5 |
| 2. | உபாத்தியாயர்களது இளைப்பாறற் சம்பளங்கள் .. .. | 2.9 |
| | மொத்தம்: (1ம்—2ம்) .. .. .. .. | 6.4 |

## புதிய வரி நடவடிக்கைகள்:

### I. வருமான வரி: —

வரி மதிப்பீட்டிற்குரிய மொத்த வருமானம் வருடத்திற்கு ரூபா 15,000த்துக்ட்பட்ட விடத்து 15 சதவீதப்படியான வரி செலுத்தப்பட்டு வந்த வரி விதிக்கப்படக்கூடிய வருமானத்தின் கடந்த ஆண்டின் ஒழுங்கு முறையாகிய முதற் பிரமாணத்தை மாற்றுவதென முடிவு செய்யப்பட்டது. இவ்வருமானத்தின் முதற் பிரமாணம், தனியாளுக்கான ரூபா 4000ல் இருந்து மணமாகி 4 குழந்தைகளுடன் கூடியவொருவருக்காகிய ரூபா 13000 ஆக மாறுபடும், ஒன்றாக இருந்தது. புதிய நடவடிக்கைகளின் கீழ் முன்னைய முதற்பிரமாணத்தின் ரூபா 1000 கொண்டதொரு பங்கு முதற் பிரமாணமாகியும் அப்பிரமாணத்துள் அடங்கிய எஞ்சிய வருமானம் பிறிதொரு பிரமாணமாகியும் வேறுபடுத்தப்பட்டு முன்னையதிற்கு 5 சதவீத வரியும் பின்னையதற்கும் 15 சதவீத வரியும் விதிக்கப்படும். இந்நடவடிக்கையின் கீழ் ஒருவரது வருமானத்தொகையும் குடும்ப அளவு நிலையும் எப்படியிருப்பினும், மேற்கூறிய வரையறவுக்குட்பட்ட ஒவ்வொரு வரியிறுப்பாளரும் ரூபா 100 கொண்ட வரிச்சலுகையைப் பெறுவர். இந்நடவடிக்கையானது நடைமுறை வரி மதிப்பு வருடமாகிய 1964/65ம் ஆண்டில் செயற்படுத்தப்படும்.

### வரித்தவிர்ப்பு: —

ஆபரணங்கள், இரத்தினக் கற்கள் தங்கம், கூடிய பெறுமான நாணயத்தாள்கள் வடிவில் மறைவாகப் பதுக்கப்பட்டு இருக்கும் செல்வம் பிரதிபலிக்கும் வரித் தவிர்ப்புக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதென நிதிமந்திரியால் தனது வரவு செலவுத் திட்டத்தில் கூறப்பட்டது. பதுக்கற் சொத்துக்களை (பதுக்கல்கள்) வெளித்தெரிவிக்கவும். அவற்றின் பெறுமானத்தின்மீது $3\frac{1}{3}$ சதவீத வரி இறுத்த பின்னர் அவ்வித சொத்துக்களை தடையின்றி உபயோகப்படுத்தவும் பதுக்கற்காரர்களுக்கொரு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது இந்நோக்கத்திற்காக பதுக்கல்களை உறுதியுரைப்படுத்தி வெளிக்காட்டவென 1964 மார்கழி 31ம் தேதி மட்டும் காலம் வழங்கப்பட்டது. 1965 தை 1ம் தேதி தொடங்கி இவ்விதமளிக்கப்பட்ட சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தாது பதுக்கற் செல்வத்தை வைத்திருந்தோர்களிற் கெதிராக வரி இறுக்கச் செய்யும் நோக்கத்துடன் உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படவிருக்கின்றன.

### அபிவிருத்திக் கழிவுகள்: —

அங்கீகாரம் பெற்ற திட்டங்களினாலும், விவசாய முயற்சிகளாலும் இதுவரை அனுபவிக்கப்பட்டு வந்த விசேட அபிவிருத்திக் கழிவான 40 சதவீதம் நீக்கப்பட்டு அதற்குப் பதில் எல்லா கைத்தொழில், விவசாய முயற்சிகளுக்கும் ஒரேயளவான தொரு 20 சதவீதம் கொண்ட அபிவிருத்தி வரிக் கழிவு கொடுபடும். இது போன்றே கைத்தொழில் முயற்சிகளுக்களிக்கப்படும் வரி விடுதலை, வருங்காலத்தில் நிதி மந்திரியின் சம்மதத்துடன் கிராம கைத்தொழில் அபிவிருத்தி மந்திரியினால் அங்கீகரிக்கப்படும் கைத்தொழில் முயற்சிகளுக்கு மட்டுமே அளிக்கப்படும். மேலும் செலுத்தப்பட்ட முதலீட்டின் 10 சதவீதத்திற்கு மாத்திரம் வரியில்லா பங்கு இலாப வசதி மட்டுப்படுத்தப்படும். தற்போது நடைமுறையிலிருக்கும் ஒழுங்கின்படி கூட்டு நிலையங்கள் அனுபவிக்கும் இலாபங்களினதும், பங்கு இலாபங்களின் மீதுமான வரி விடுதலைச் சலுகைகளை, வருங்காலத்தில் மேற்கூறிய 10 சதவீதத்திற்கு மேலான பங்கு இலாபத்தை ஒரு கூட்டு நிலையம் விநியோகிக்கின் இழக்க நேரிடும்.

## II. செல்வ வரி:

செல்வ வரி பற்றி மூன்று முக்கிய மாற்றங்கள் செய்யப்படவுள்ளன. முதலாவது இலாப நோக்கமில்லா தர்மத் தாபனங்கள் பற்றியது. இந் நிறுவனங்களுக்குரிய செல்வ வரியின் பேரிலான தற்போதைய ரூபா 20,000 ஆகிய வரியில்லாப் பிரமாண எல்லை ரூபா 100000 ஆக உயர்த்தப்பட இருக்கிறது. இந்நடவடிக்கை செல்வ வரிபுகுத்தப்பட்ட வருடமாகிய 1959/60 வரிமதிப்பு வருடத்திலிருந்து அமுலுக்கு வந்ததாகக் கணிக்கப்படும். இந்நடவடிக்கையின் விளைவாக அரசிறைக்கேற்படும் நஷ்டம் வருடத்திற்கு ரூபா 50,000 ஆக மதிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது மாற்றம் செல்வ வரியின் தற்போதைய வரி விகிதத்தையொட்டிய வரிக்கணிப்பு முறை பற்றியதாகும். செல்வத்தின் ரூபா 100,000 அடங்கிய முதற் பகுதியின் மேல் வரி விதிக்கப்படமாட்டாது. மேலும் இவ்வித வரி விலக்கத்தின் மூலமாக அரசிறைக்கேற்படக்கூடிய நஷ்டத்தை ஈடு செய்யும் நோக்கத்துடன் செல்வ வரி வீதங்கள் மாற்றியமைக்கப்படும். செல்வ வரியின் ஆகக் கூடிய வீதம் ரூபா 3,000,000 மேற்பட்ட செல்வம் படைத்தோர் இறுக்க வேண்டிய வீதமான 5 வீதத்திற்கு உயர்த்தப்படும். வரி வீதங்களை உயர்த்துவதன் மூலம் கிட்டும் அதிகரித்த அரசிறை ரூபா 45 இலட்சமாக மதிப்பிடப்பட்டுள்ளது. மூன்றாவது மாற்றம் ஸ்டேர்லிங் கூட்டு நிலையங்களினது பங்குகளையும் செல்வ வரியின் கீழ் கொண்டுவருவதை ஒட்டியதாம். இவ்விதப் பங்குகள், இலங்கையருக்குச் சொந்தமான பங்குகளைத் தவிர இலங்கையில் இருக்கும் சொத்துக்கள் எனச் கணிக்கப்பட முடியாததால், இவற்றின் முழுப் பெறுமானமும் செல்வ வரிக்குட்படுவதாயில்லை. இந்நிலையைச் சீர்படுத்தும் முகமாக இலங்கையிலே அசைவற்ற சொத்துக்களைச் சொந்தமாகக் கொண்ட இலங்கை வதியாக் கூட்டு நிலையங்களின் வருவாய்மீது 10 சதவீத வரி ஒன்று செல்வ வரிக்குப் பதிலாக விதிக்கப்படும். ஒருவரது செல்வ வரி விதிக்கப்பட்ட செல்வத்தின் ஒரு பாகமேனும் வதியாக் கூட்டு யுலையங்களின் பங்குகளின் பெறுமான வடிவில் இருப்பின், கூட்டு நிலையத்தின் மேல் விதிக்கப்பட்ட செல்வவரி கவனத்திற்கெடுத்துக் கொள்ளப்பட்டதன் பின்னர் தக்க வரிச் சலுகை இதன் நிமித்தம் அளிக்கப்படும். இரட்டிப்பு வரி விளைவுகளைக் குறைப்பதற்கே இவ்வாறு செய்யப்படவிருக்கிறது.

### செலுத்தும் வரியின் வரையறை: —

தற்போது நடைமுறையிலிருக்கும் சட்டத்தின்படி எந்த வரி இறுப்பாளரிடமிருந்தும் வருமானவரியின் பேரிலும் செல்வவரியின் பேரிலும் வரியாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய தொகை அவரது வரி மதிப்பு வருமானத்தில் 80 சதவீதத்திற்குக் கூடியதாய் இருக்க முடியாது. இவ்விதமான வரையறவு நீக்கப்படும்.

### வீட்டுச் சொத்து வரி: —

வீட்டுச் சொத்தை ஒட்டிய ஒரு விசேட வரி ஒன்று விதிக்கப்படும். இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு வரி இறுப்பாளரும் பெறுமானம் எவ்வகையாயினும் தனது சொந்தப் பாவிப்பக்கென ஒரு இருப்பிடத்தின் வரி இல்லா உடமைக்கும் தவிர மேலதிகமாக ரூபா 100,000க்குட்பட்ட வீட்டுச் சொத்திற்கும் உரியவராவர். இந்த வரையறைவைத் தாண்டிய வீட்டுச் சொத்துக்கள் யாவற்றின் மீதும் அச் சொத்தின் பெறுமானத்தின் 10 சதவீதமான வரி விதிக்கப்படும். 1965 சித்திரை 1ம் தேதி தொடக்கம் இத்திட்டம் நடைமுறைக்கு வர இருக்கிறது.

## III. சுங்கத் தீர்வைகள்:

### இறக்குமதித் தீர்வைகள்: —

நிலஎரி எண்ணை பொருட்களின் மீதான தீர்வைகள் உயர்த்தப்படும். இத்தீர்வை அதிகரிப்பை பெட்ரோலியக் கூட்டுத்தாபனம் தாங்கிக் கொள்ள இருப்பதால், நுகர்வோர் மீது இவ்வதிகரிப்புச் சுமத்தப்படமாட்டாது. நிலஎரி எண்ணெய் பொருட்கள் மீதான தீர்வைகளின் அதிகரிப்பு பின்வருமாறு: —

| | | | | |
|---|---|---|---|---|
| நிலஎரி எண்ணெய் (சுப்பர்) | கலன் | .... | 12 | சதத்தால். |
| நிலஎரி எண்ணெய் (சாதாரணம்) | ,, | .... | 10 | ,, |
| மண்ணெண்ணெய் | ,, | .... | 10 | ,, |
| மோட்டார் டீசல் எண்ணெய் | ,, | .... | 07 | ,, |
| பாரவண்டி டீசல் எண்ணெய் | ,, | .... | 07 | ,, |
| சூளை எண்ணெய் | ,, | .... | 01 | ,, |
| உராய்வு நீக்குமெண்ணைகள் | ,, | .... | 20 | |

இறக்குமதித் தீர்வைகளை உயர்த்துவதன் முக்கிய நோக்கம் இலங்கைப் பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்தால் தனது தற்போதைய நிரம்பலாளர்களிடமிருந்து அனுபவிக்கும் கழிவுகளை அரசிறைக்குள் சேர்த்துக் கொள்வதே எனக் குறிப்பிடப்பட்டது.

## ஏற்றுமதித் தீர்வைகள்: —

ஏற்றுமதி செய்யப்படும் இரத்தினக் கற்களின் பெறுமானத்தின் 5 சத வீதம் ஏற்றுமதித் தீர்வையாக விதிக்கப்பட்டது.

## தேயிலை மீதான வரிகள்: —

நடைமுறையிலிருந்த இறாத்தல் விலை ரூபா 1·85க்குக் கூடின், அம்மிகையின் ஆகக்கூடிய தொகையாகிய 70 சதத்திற்குட்பட்ட 50 சத வீத விலை அடிப்படையிலான வரிக்குப் பதிலாக 100 ஏக்கர்களுக்கு மேலான நிலப்பரப்பைக் கொண்ட தேயிலைத் தோட்டங்களின் ஒரு ஏக்கர் வரி விதிக்கப்படும். இவ்வரி மாறுபடும் அளவு அடிப்படையில் விதிக்கப்படும். உயர் பிரதேசத் தேயிலைக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூபா 300ம், மத்திய, தாழ்ந்த பிரதேசத் தேயிலைக்கு ஏக்கருக்கு ரூபா 60ம் வரி வீதங்களாகும். கொழும்பு ஏலம் மூலமாக விற்கப்படும் எல்லா ரகத் தேயிலைமீதும் தற்போது இறாத்தலுக்கு 35 சதமாக விதிக்கப்படும் குறித்த ஏற்றுமதித் தீர்வை தொடர்ந்தும் இறுக்கப்படும். கொழும்பு ஏலத்தில் விற்கப்படாமல் லண்டன் ஏலத்தில் விற்பனைக்கெனக் கப்பலேற்றப்படும் தேயிலைமீது மேலதிகமாக இறாத்தலுக்கு 10 சதம் அறவிடப்படும். தேயிலைஏக்கர் வரி மாதா மாதமோ அன்றி காலாண்டாகவோ இறுக்கப்படவேண்டும். இவை பெருந் தோட்டங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும். இப்புதிய தேயிலைவரித் திட்டம், நல்ல ரகத் தேயிலைகளின் உற்பத்திக்குத் தூண்டுகோலாக அமையுமென மந்திரியால் எதிர்பார்க்கப்பட்டது.

## பார எண்ணெய் மோட்டார் வாகனங்களின் மீதான வரி: —

1965 தைமாதம் 1ம் தேதியோடு பார எண்ணெய் மோட்டார் வாகனங்களின் மீதான வரி ஒழிக்கப்படும் என நிதி மந்திரியால் கூறப்பட்டது. ஒட்டோ டீசல் எண்ணெய்யின் மீதான இறக்குமதித் தீர்வையின் தகுந்தளவு அதிகரிப்பின் நிமித்தம், இவ்வரி ஒழிப்பினால் இழக்கப்பட்ட தொகையளவான வரி வருவாய் பெறப்படுமாதலால், அரசிறைக்கு இதனால் நட்டமேதும் ஏற்படாது.

## IV. ஏனைய அரசிறை நடவடிக்கைகள்:

இத்தலைப்பின் கீழ் வரவு செலவுத் திட்டத்தில் கூறப்பட்ட அரசிறை நடவடிக்கைகள் சில கூறப்படுகின்றன.

1. பத்திரிகைகளினது விளம்பர வருமானம் மீதான வரி:

தமது பிரித்தியோகமான பிரசுரத்திற்கான பத்திரிகையில் ஒதுக்கப்பட்ட இடத்தின் 20 சதவீதத்திற்கு மேலான இடத்தின் விளம்பர உபயோகத்தினால் வரும் வருமானத்தில் $33\frac{1}{3}$ சதவீதம் வரியாகச் செலுத்தப்படல்வேண்டும். இந்த 20 சதவீத வரையறைவைக் கணிப்பதில் வீட்டு, சமூக அறிவித்தல்கள், உதாரணமாக மரண, கலியாண அறிவித்தல்கள் போன்றவை தவிர்த்துக் கொள்ளப்படும்.

2. சிகரெட் புகையிலை:

ஒரு இறாத்தலுக்கு 50 சதத்தால் சிகரெட் புகையிலையின் உள்நாட்டு வரி உயர்த்தப்படும். இவ்வரியுயர்வானது சிகரெட்டுகளின் விலையை உயர்த்தியோ அன்றி உற்பத்தியாளர்கள் மீது அவர்கள் புகையிலைக்களிக்கப்படும் விலையைக் குறைத்தோ நுகர்வோர் மீது சுமத்தப்படாதென எதிர்பார்க்கப்பட்டது.

3. தீப்பெட்டிகள்:

கிராம, கைத்தொழில் அபிவிருத்து மந்திரியினால் குறிக்கப்படும் உற்பத்தி இலக்குகளை நிறைவேற்றும் உற்பத்தியாளர்களுக்கு சலுகையாக அளிக்கும் நோக்கத்துடன் ஒரு தீப்பெட்டி மீதான உள்நாட்டு வரியை அரைச்சதத்தால் குறைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. இந்நடவடிக்கையினால் அரசிறைக்கு பெருமளவு நட்டம் எதிர்பார்க்கப்படவில்லை.

4. பயணச் செலவை ஒட்டிய வரி நடவடிக்கைகள்:

வருமானத்தைத் தோற்றுவிக்கும் விதத்தில் தீவினுள் செய்யப்பட்ட எல்லாப் பயணச் செலவுகளின் மீதும் வரி விலக்கம் செய்யும் நோக்கத்துடன் தற்போதைய ஒழுங்கு முறைகள் மாற்றி அமைக்கப்படும். பயணத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட வாகனங்களின் மீதான பெறுமானத் தேய்வு வரி மதிப்பீட்டில் கணிக்கப்படமாட்டாது. முதலாளிகளால் தமது ஊழியர்களுக்கு அளிக்கப்படும் பயணப்படிகள் மீது வரி செலுத்த வேண்டியதில்லையாயினும், வருடத்திற்கு ரூபா 1200க் கதிகமான பயணப்படி யாவும் வரி மதிப்பிற்கென வருமானமாகக் கணிக்கப்படும்.

5. முத்திரைக் காரியாலயத்தின் நிறுவனமும், விசேட முத்திரை வெளியீடுகளும்:

1965 தைமாதத்திலிருந்து இம் முத்திரைக் காரியாலயம் இயங்கும்.

6. அரசாங்க இரத்தினக் கற்கள் கூட்டுத்தாபனத்தின் நிறுவனம்:

இலங்கையிலிருக்கும் இரத்தினக் கற்குழிகளின் மீது உத்தரவுச் சீட்டுக் கட்டணத்தை விதிக்கவும், இரத்தினக் கற்றொழிலில் ஈடுபட்டிருக்கும் வியாபாரிகள், தரகர்கள், ஏல விற்பனையாளர், விநியோக உரிமையாளர், கல் தீட்டுவோர் மீது வரிகள் விதிக்கவும இக்கூட்டுத்தாபனத்திற்கு அதிகாரம் வழங்கப்படும். அந்நிய செலவாணியைச் சம்பாதிக்கும் வாய்ப்பை விட, ரூபா 100 இலட்சம் கொண்ட அரசிறையும் இக்கூட்டுத்தாபனத்திடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது.

குறிப்பு: மார்கழி 1964 பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் காரணமாக, வரவு செலவுத் திட்ட உரையில் எடுத்துக் கூறப்பட்ட சில புதிய அரசிறை நடவடிக்கைகள் இன்னும் சட்டமாக்கப்படவில்லை. அவையாவன:--ஒரே அளவான 20 சதவீத அபிவிருத்திக் கழிவு, வரிகட்டும் வருமானத்தின் 80 சதவீத வரையறையின் ஒழிப்பு, வீட்டுச் சொத்துவரி, தேயிலை மீதான புது வரிகள், பத்திரிகைகளின் விளம்பர வருவாய் வரி, அரசாங்க இரத்தினக்கற்கட் கூட்டுத்தாபனத்தினதும், முத்திரைக் காரியாலயத்தினதும் நிறுவனம்:

## நடைமுறைச் செலவு:—

மீண்டு வரும் செலவின் (அதாவது வாக்குப் பணங்கள் 1, 2, 4, 6 ஆகியனவற்றில்) மொத்தத் தொகை ரூபா 18794 இலட்சமாகும். இதிலிருந்து மூலதனச் செலவுத் தன்மையுடைய விடயங்களையும், ஆழ்நிதிக்கு உதவுவதற்கான மதிப்பீட்டுத் தொகைகளையும், கடன்களின் நேரடித் திருப்பிக் கொடுப்பனவையும் கழித்தபின் எஞ்சிய நடைமுறைச் செலவுத் தொகை ரூபா 17451 இலட்சமாக உள்ளது. இது 1963/64ற்கான உண்மைச் (தற்காலிகமானது) செலவீடாகிய ரூபா 17584 இலட்சத்துடன் ஒப்பிடற்பாலது. 1964/65ல் நடைமுறைச் செலவுகள் குறைவாக அமைந்தமை பிரதானமாக உணவு மானியச் செலவிற்கென ஒதுக்கப்பட்ட குறைந்த செலவும், மகா வங்கியினுற் கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மீது கொடுபட வேண்டிய குறைந்த வட்டி வீதமுமே காரணங்களாகும்.

## மூலதனச் செலவு:—

மூலதனச் செலவுக்கான மூல மதிப்பீடுகளின் (அதாவது 3, 5, 7, ஆகிய வாக்குப் பணங்கள்) தொகை ரூபா 5580 இலட்சமாகும். மீண்டு வரும் செலவுக்கான வாக்குப் பணங்களின் கீழ் உள்ள மூலதனச் செலவு விடயங்களையும், வரவு செலவுத் திட்டத்திற்கப்பாற்பட்ட ஒதுக்கு நிதிகளிலிருந்து அறவிடத்தக்க மூலதனச் செலவுகளையும் சேர்த்தபின் 1964/65ம் நிதியாண்டிற்கான மொத்த மூலதனச் செலவு ரூபா 6476 இலட்சமாக உள்ளது. இத்தொகை 1963/64ம் ஆண்டில் உண்மையாக (தற்காலிகமானவை) ஏற்பட்ட செலவிலும் பார்க்க 443 இலட்சம் கூடியதாயும் அவ்வாண்டிற்கான மூல மதிப்பீட்டிலும் பார்க்க ரூபா 22 இலட்சம் கூடியதாயும் உள்ளது.

## வரவு செலவுத்திட்டக் குறைக்கு நிதியீட்டுதல்:—

பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டபடி வரவு செலவுத் திட்டம் ரூபா 5090 இலட்சம் கொண்ட குறையைக் காட்டுகின்றது. இக்குறைக்கு வேண்டிய நிதியீட்டம் ஆனதிற்கு ரூபா 250 இலட்சம் கடன்கள் மூலமாகவும் ரூபா 225 இலட்சம்

வெளிநாட்டுதவி மூலமாகவும், ரூபா 35 இலட்சம் நிர்வாகக் கடன் பாட்டின் மூலமும் பெறப்படுமென எதிர்பார்க்கப்படும். மொத்தம் ரூபா 5100 இலட்சம், முழுக் குறைக்கும் நிதியீட்டுவதற்கு கூடியதாக உள்ளது.

பின்வரும் பகுதியினில் வெளிநாட்டு உதவிகளின் வருவாய்கள் பற்றிய குறிப்புகள் விபரமாகத் தரப்பட்டுள்ளன.

## வெளிநாட்டு உதவி: —

1964/65ம் ஆண்டிற்கென வரவு செலவுத் திட்டத்தில் வெளிநாட்டு உதவிகளிலிருந்து பயன்படுத்துவதற்கென எதிர்பார்க்கப்பட்ட தொகை ரூபா 2250 இலட்சமாகும். இத்தொகை சென்ற நிதியாண்டிலிருந்த தொகையிலும் பார்க்க ரூபா 500 இலட்சம் அதிகமானதாகும். 1963/64ம் ஆண்டில் உண்மையில் கிடைத்த வெளிநாட்டுதவி வருமானத் தொகையுடன் ஒப்பிடுகையில் இத்தொகை ரூபா 1175ஆல் அதிகமானதாகும். 1964/65ம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் வெளிநாட்டுதவியில் ரூபா 1286 இலட்சம் கொண்டதொரு குறிப்பிட்ட சில திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டது. இத்தொகையில் ரூபா 783 இலட்சம் கடன்களின் வடிவிலும் கொடுகடன்களின் வழியாக உள்ள பயன்பாடுகளின் வடிவிலும் ரூபா 503 இலட்சம் கொண்ட தொகை நன்கொடைகளின் வடிவிலும் வழங்கப்படும்.

அந்நியக் கடன்களிலிருந்தும், கொடுகடன்களின் வழியாக உள்ள பயன்பாடுகளிலிருந்தும் நிதியீட்டப்படும் பெருந் திட்டங்களில் மஸ்கெலியா ஓயா திட்டத்திற்கென கனடாவிடமிருந்து பெறப்படும் ரூபா 208 இலட்சம் கொண்ட கடன்களும் இலங்கைச் சிமேந்துக் கூட்டுத்தாபனத்தின் முதலீட்டளிப்பாக மேற்கு ஜெர்மனியின் ரூபா 142 இலட்சக் கடனும் நீர் மின்சாரத் திட்ட II ஆக நிலைக்கென சர்வதேச புனருத்தாரண, அபிவிருத்தி வங்கியின் ரூபா 112 இலட்சம் கொண்ட கடனும் இலங்கை எஃகுக் கூட்டுத்தாபனத்தில் முதலீட்டத்திற்கென உருசியாவின் ரூபா 83 இலட்சக் கடனும் பயன்படுத்தப்படும். நடைமுறை வருடத்தில் எதிர்பார்க்கப்படும் அந்நிய அரச கரும நன்கொடைகளின் இரு மூலங்களாக கட்டுநாயக்கா விமானத்துறை அபிவிருத்திக்கென கனடாவால் அளிக்கப்படவிருக்கும் ரூபா 145 இலட்சமும், இரண்டாந்தரமாக கப்பலேற்றப்படவிருக்கும் புகையிரதப் பிரயாணப் பெட்டிகள், புகையிரதச் சரக்குப் பெட்டிகள் வடிவில் அமையும் செஞ்சீனவின் ரூபா 129 இலட்சமும் அமைவன.

## குறிப்பு: —

திறைசேரியால் செய்யப்பட்ட 1964/65ற்கான வரவு செலவுத் திட்ட மூல மதிப்பீடுகளின் தற்காலிகமான மாற்றியமைப்பின்படி, வரவு செலவுத் திட்டத்தில் எடுத்தியம்பப்பெற்ற சில அரசிறை நடவடிக்கைகள் செயற்படுத்தப்படாத போதிலும் மொத்த அரசிறைச் சேர்க்கைகள், வரவு செலவு திட்டத்தின் மூல மதிப்பீடுகளிலும் கூடுதலாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்விதம் எதிர்பார்க்கப்படும் அரசிறைச் சேர்க்கையின் அதிகரிப்பில் அடங்கும் முக்கிய விடயங்களாக இலங்கைப் போக்குவரத்துச் சபை கட்டவிருக்கும் பார டீசல் எண்ணெய் வாகன வரி மிச்சங்களின் அதிகரிப்பும், வருமானவரி மூலமான அதிகரிப்பும் புகையிலை வரி மூலமான அதிகரிப்பும், மேலும் ரப்பர் மீதான ஏற்றுமதித் தீர்வைகளில் ஏற்படும் வீழ்ச்சியினால் தேற்றப்பட்ட தெங்குப் பொருட்களின் ஏற்றுமதித் தீர்வைகளும் அமைவனவாம். மொத்த அரசிறையில் ஒரு அதிகரிப்பு எதிர்பார்க்கப்படுகையில் வரவு செலவுத்திட்டம் எதிர்பார்த்த அளவிலும் குறைவாக மொத்தச் செலவு அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன் முக்கிய காரணமென்னவெனில் பொதுத் தேர்தல் நடாத்தப்பெற்றமையாலும், வரட்சி, சூருவளி நிவாரணங்களினாலும், எழுந்த மேலதிகச் செலவு வாக்குப்பணங்களின் தொகையை ஈடு செய்து மேலும் எஞ்சும் விதமாக அமைந்த உணவு மானியச் செலவில் ஏற்படக்கூடிய குறிப்பிடத்தக்க வீழ்ச்சியே இக்காரணங்களின்படி மொத்தச் செலவில் எதிர்பார்க்கப்படும் வீழ்ச்சியும், அரசிறையில் எதிர்பார்க்கப்படும் அதிகரிப்பும் ஒருமித்து மொத்த வரவு செலவுத் திட்டப் பணக்குறையைக் குறிப்பிடத்தக்களவு குறைக்க வேண்டும்.